ஸ்ரீஸ்கந்தராஜா கண்மணி

# நினைவு மலர்

## SOUVENIR

In memory of the late

"SAIVA SIKAMANI"

## MR. P. SRI SKANDA RAJAH

AND

## MRS. KANMANY SRI SKANDA RAJAH

*Published by:*

**…BO, KOMPANITHTHERU SAIVA MUNNETTA SANGAM,**

131, KEW ROAD, COLOMBO-2.

929.2
நினைவு

உ

சிவசோதி அருட்சோதி

அம்பலவாணர் அருள் நிழலில்

ஆனந்தத் துயில் நிகழ்த்தும்

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE LIBRARY
JAFFNA

## அருளாளன் சைவசிகாமணி பொன். ஸ்ரீஸ்கந்தராஜா

## மங்கையர் திலகம் திருமதி. கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா

இவர்களின் அரிய சேவைக்கு

# இந் நினைவு மலரால்

அர்ச்சிக்கின்றேம்.

கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்


131, கியூ வீதி, கொழும்பு-2.

**1-2-1969**

929.2

EVELYN RU… STI… UTE
REFER… LIBRARY
212
JAF

5H7



திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராஜா ★ திருமதி. கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா

தோற்றம்: **8 - 2 - 1905**
மறைவு: **24 - 12 - 1968**

தோற்றம்: **22 - 9 - 1909**
மறைவு: **2 - 1 - 1969**

# தோற்றமும் மறைவுமே
# உலக அரங்கு

தமிழுக்கும் சைவத்துக்கும் சிறப்புச் செய்த கனம் சேர் கந்தையா வைத்திய நாதன் திடீரென்று மறைந்தார். அது இடி இடிப்பது போன்றதோர் அதிர்ச்சியை விளைத்தது. அந்தப் பெருமகனுரைத் தொடர்ந்து,

நேர்மைக்கும் திண்மைக்கும் ஒருவரான உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஸ்கந்த ராஜா சென்று விட்டார். அவருடைய அன்புக்குரிய வாழ்க்கைத் துணைவியார்,

''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுது வீழ்ந்தன ளேமடமொழி''

என்று பாண்டியன் நெடுஞ்செழியனைத் தொடர்ந்த பாண்டிமாதேவியைக் கூறியதனை ஞாபகப்படுத்தும் வகையில்,

தங்கொழுநற் ருெழுது, உடன் சென்று, பெண்மையை விளக்கஞ் செய்து விட்டார். பிரிவாற்ருமை உடன் பிறப்பையுங்கூட உடன் கொண்டு சென்று விட்டது.

நாடு கரைதுறை தெரியாது கலங்குகின்றது.
பரம கருணநிதியின் திருவருட் குறிப்பை அறிவார் யார்!

தனக்குவமை யில்லாதான் தாளை அணுகாதே, மனக்கவலையை மேலும், மேலும் பெருக்கி, வானவெளியிலும் பரப்புகின்றது, இந்த விண்ணுன மண்ணுலகு.

விண்ணுணம் — விஞ்ஞானம்.

இந்நிலைமை கொடிது! கொடிது!!

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
14-1-69

# நான் கண்ட உத்தமர்

காலஞ் சென்ற நீதி அரசர் உயர்திரு ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் நீதிபதியாகக் கடமையாற்றும் பொழுது நான் ஒரு பாடசாலை மாணவனாக இருந்தேன். பாடசாலைக்குச் செல்லும் போதும் வீடு திரும்பும் போதும் அவர் வசித்த இல்லத்தைக் கடந்தே செல்ல வேண்டி இருந்தது. அவருடைய இல்லத்தைக் கடந்து செல்லும் போதெலலாம் நான் அவ்வில்லத்தைப் பயத்துடன் நோக்கிச் செல்வது வழக்கம். ஏனெனில் அவர் ஒரு கட்டுப்பாடுடைய நீதிமான் என்பது அந்நேரத்தில் ஊரில் நிலவிய பேச்சு. உலக யுத்தம் நிகழ்ந்த அவ்வேளையில் உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் அமுலுக்கு வந்தன. திரு ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களைச் சந்திக்க வந்த அவருடைய மாமனர், வரும்போது யாழ்ப்பாணத்தில் இருந்து தனது மகளுக்கும் மருமகனுக்கும் ஒரு புசல் அரிசி கொண்டு வந்ததாகவும், மாமனர் அரிசியுடன் வந்து இறங்கியதும் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் மாமனர் கொண்டு வந்த பொருள் கட்டுப்படுத்தப்பட்ட பொருள் ஆனமையினுல் உடனடியாக அதை கொண்டு வந்த ஊருக்கே திருப்பி அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும், மாமனை மனவருத்தத்துடன் திருப்பி அனுப்பியதாகவும் ஊரில் அன்று பேச்சு நிலவி வந்தது.

திரு. ஸ்ரீஸ்கந்தராஜாவின் வீட்டிற்குச் சென்று அவருடன் உரையாடும் பரிச்சயம் பெற்றிருந்த திருகோணமலையில் வசித்த ஒருவர், ஒரு நாள் அவருடைய இல்லத்திற்குச் சென்று ஏதோ ஒரு வழக்கு விடயமாகக் கதைத்ததாகவும், மேலும் அந்த வழக்கில் தானும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை அவருக்கு இலைமறை காயாக வெளிப்படுத்தி இருந்ததாகவும், அடுத்த நாள் காலை நீதி மன்றத்தில் அதே நபர் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டு இருந்ததை அறிந்து பகிரங்கமாக நீதிமன்றத்திலேயே முதல் நாள் இரவு அந்த நபர் தன்னை தன் வீட்டில் கண்டு கதைத்ததை வெளியிட்டுத் தான் அந்த வழக்கை விளங்கப் போவதில்லை எனக் கூறியதாகவும் அறியக் கிடக்கின்றது.

ஒரு நாள் இந்துக் கல்லூரி மண்டபத்தில் பேச்சொன்றை வழங்கிக் கொண்டிருந்த நீதியரசர் இடையில் தனது பேச்சை நிறுத்தி விம்மி விம்மி அழத் தொடங்கினர். இதற்குக் காரணம் அவர் அப்பேச்சை நிகழ்த்திக் கொண்டிருக்கும் வேளையில் கதிர்காமக் கோயிலில் இறந்த காலத்தில் நடந்த ஒரு உருக்கமான நிகழ்ச்சி அவரின் நினைவுக்கு வந்தமையேயாகும். அதாவது, கதிர்காமத்தில் தீக்குளிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஓர் இளம் பிராமணப் பிள்ளை திடீர் என்று அவ்விடத்தில் தோற்றமளித்ததாகவும், பின் அது முருகன் ஆலயத்தை நோக்கி நடந்து சென்றதாக தாகவும், இதை தான் தனது இரு கண்களினுலும் தரிசித்ததாகவும் கூறி அவர் மனம் கசிந்து கண்ணீர் சொரிந்தார்.

இந்து வாலிபர் சங்கக் கிளையொன்றை திருகோணமலையில் ஸ்தாபிக்க வேண்டும் என்பது நீதியரசரின் பேரவாவாக இருந்தது. இதற்குத் தேவைப்பட்ட நிதியைத் திரட்ட ஓர் நாடகம் நடாத்தப்பட வேண்டும் என அவர் கூறினர். இந்நாடகத்துக்கு அப்பூதி அடிகளின் வரலாறு கருவாக விளங்க வேண்டுமென அவர் முடிவு செய்தார்.

இந்நாடகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்த நீதியரசர் அப்பூதி அடிகளாக நாடகத்தில் தோன்றியவரின் திருக்கோலத்தைக் கண்டு கண்ணீர் சொரிந்த வண்ணம் இருந்தார் என்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

மேற்கூறியவை உயர்திரு. ஸ்ரீஸ்கந்தராஜாவின் ஆழ்ந்த பக்தித் திறனை எடுத்துக் காட்டுகின்றது எனக் கூறின் மிகையாகாது.

நீதி பரிபாலிக்கும் வேளையில், கொலை செய்தவனுக்கு மரண தண்டனை விதிக்கும் போது வைராக்கியத்தைக் கொண்டும், இறைவனை ஏத்தி வழிபாடு செய்யும் போது நெக்குருகும் தன்மையைக் கொண்டும் விளங்கிய இப்பெரியாரின் பெருமை எத்துணை மதிப்புக்குரியது. இவர் நம் சமூகத்தில் தோன்றிய மாபெரும் உத்தமர் என மதித்துப் போற்றி வாழ்வோமாக.

நகராண்மைக்கழகப் பணிமனை, — டாக்டர் **சி. சிவானந்தம்,**
திருகோணமலை. — நகராண்மைக் கழகம், திருகோணமலை

✡ ✸ ✡

## இறைவனின் இன்னருள் — ஒன்று

1915-ம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1916-ம் ஆண்டின் முற்பகுதியிலும் ''தோற்றதென் வயிற்னகம்படியே — குடரோடு துடக்கி முடக்கியிட'' என்றாற் போன்று, ஒரு வயிற்று வலி தோன்றிற்று. மேலை நாட்டு வைத்தியமும் நம் நாட்டு வைத்தியமும் இந்நோயை மாற்ற வலிமையிழந்திருந்தது. ஒரு நாட் காலை வளலாயிலிருந்து எனது வீடு நோக்கிப் போகுங்கால் சிங்கார வேலன் குடியிருக்கும் செல்வச் சந்நிதி ஆலயம் மார்க்கமாகவே செல்ல நேர்ந்தது. ஆலயத்திலிருந்து கால் மைல் தூரத்துக்கிடையில் முன் கூறிய வயிற்று வலி என்னை மீண்டும் வருத்திற்று. கோவில் சந்நிதானத்தை அடைந்து கோவிலுள் குடிகொண்ட குமரனை விழித்து ''நீ இக்கோவிலுள்ளே இருக்கின்றாயானால் ஏன் நான் இப்படி வருந்துகின்றேன்'' என்று கண்ணீர் மல்கி கரைந்துருகி மெய்மறந்து நின்றேன்! என்னை வாட்டிய வயிற்று வலி மறைந்தது மாத்திரமன்று — அதன் பின் என்னை வாட்டியதுமில்லை.

(ஸ்ரீஸ்கந்தராசா அவர்களது தினக்குறிப்பிலிருந்து)

# பரிவிரங்கற் பாமாலை

**க. சு. சித்திரவேல்,** தலைவர் கோணேசர் ஆலயப் பரிபாலன சபை.

**வெண்பா:**

சித்தாந்த சைவசிகாமணியே தேவர் தொழும்
வித்தக மாஞானத்தொளிவடிவே — பக்திநிறை
சேவைக்கனியாஞ் ஸ்ரீஸ்கந்தராஜா வெம்
தேவே பிரிந்தது மேன்செப்பு.

**ஆசிரியப்பா:**

மணியெறி கங்கை மருவாராழி
துதி பரவுந் தென்கைலையாமிதனை
ஒளிவளர் பவழந்துயர் ஞானத்தின்
தெளிவாஞ் ஞானசம்பந்தர் இனிய
தேவாரப் பண்திசை மலிவளத்தின்
சிரமெனத் தினந் தேவருந்துதிக்கும்
தமிழர் தொல் பதியெனத் திறம்படநின்ற
திருமாமலை முன்செய்த புண்ணியத்தால்
உலகெலாம் நலிந்த யுத்தகாலத்து
கலையுயர் நீதி பதியாயமர்ந்து
நிலைபெற வொழுங்கை நாட்டியும்மற்று
சைவமுந் தமிழுந் தழைத்திட வெண்ணி
இந்துமா மன்றந்தனை யுருவாக்கி
சிந்தை கவர்ந்திட தொண்டுகள் புரிந்தும்
உள்ளம் வியக்கும் உயர்நீதிமன்னாய்
திருமலை மருவியகாலையிற் கோணை
நாயகர் பதியில் நலமுற வணங்கி
பதவிகையேற்ற பண்பும் இனிய
சிவனிரவன்று சிந்தை களிப்புற
மங்கையர்க் கரசியின் மாண்பினை விளக்கி
மனைவியைக் கொண்டுரையாற்றிய மகிமையும்
குவலயம் புகழும் கோணையம் பதியை
புனிதத்தல மாய்ப்பெற வரும்குழுவின்
தலைவராய மர்ந்துந் தனிச்சிறப்புற்றீர்
புகழுடல் வாய்ந்த புண்ணிய வடிவின்
நிலவுமிழ் மதியின் நிறைமுக மணியே
தலைதவழ் வதனக் கண்மணி தனக்குத்
தலைவரா யமைந்த தமிழ்புகழ் மன்னே.
சிலைவே றின்றியெம் சிந்தையிலென்றும்
உலவு மோரொளியா முத்தமா எம்மைப்
பிரிந்தெங் குற்றீர் பிரிவோ தணியேம்
வானவர் விருந்தாய் மருவியெம் மாதுமை
பாகனடி மலர் பாவையர் திலகக்
கண்மணியாருடன் கலந்திடு பெருமை
நண்ணிய வெங்கள் நவமணியும்மை
எண்ணித் துதிப்போம் இதயத் தென்றும்.

**கலித்துறை:**

நெறிவளர் பக்தி நிறையறிவா லுயர்நீதிமணி
பொறிவழியோ டைம்புலன்வென்ற ஞானப்புலவர்மணி
அறிவரிதாகு கலைமணி கண்மணிக் கன்புமணி
செறிதமிழின் சுவைச்ஸ்ரீஸ்கந்தாராஜா சிரோன்மணியே.

# "உயர்ந்த மனிதன்"

காலம் சென்ற நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் எனது மாமனுரான சி. என். தேவராசாவின் நண்பர். எனது மாமனுர் பலமுறை இவரின் நேர்மை, திறமை, நற்குணங்கள் முதலியவற்றை எடுத்துச் சொல்லியிருக்கிறுர்.

மனிதனை மனிதன் என்று மதிக்கும் நல்ல சுபாவமுடையவர். ஏழை, பணக்காரர், அறிவாளிகள், அறிவற்றவர்கள், சாதி, குலம் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் அன்பால் அணைப்பார். அதனுல் அவர் வழங்கும் நீதி அன்பின் அடிப்படையில் அமைந்ததே.

தனக்கு எந்தக் கடமையையும் இறைவனே தந்திருக்கிருன் என்றும் அக்கடமைகளை நான் இறைவன் கையில் ஓர் கருவியாக இருந்து ஆற்றுகிறேன் என உணர்ந்தும்; அக்கடமைகளைச் செய்யும் பொழுது, அக்கடமைகளும்கு ஆதாரமாய் உள்ள விபரங்களையெல்லாம் ஐயந்திரிபற ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வருவார். அந்த முடிவுகள் நல்லவர்களைக் காக்கும். தீயவர்களைக் கடியும்.

உத்தியோக ரீதியில் என்ன அடிப்படையில் கடமையாற்றுவாரோ அந்த முறையிலேதான் அவரின் குடும்ப நிருவாகமும் அமைந்திருக்கிறது. பக்கம் சாராது, விகாரப்படாது, உண்மையை உணர்ந்து காரியங்களை சரியான முறையில் ஆராய்ந்து அதன் பின்னரே தன் குடும்ப அங்கத்தவர்களுக்கு புத்திமதி சொல்லும் பழக்கமுடையவர்.

சத்தியம், அகிம்சை, அறம், ஞானம் முதலியவற்றை கடைப்பிடிக்கும் அவர் கிரிகைகளையும் மனமுவந்து செய்வார். சந்நிதிக் கந்தனுக்குக் காவடி எடுப்பார்; எந்தக் கடமைகளைச் செய்யு முன்னும் நல்ல நேரம், காலம் பார்ப்பார். பக்தனுக கோவிலில் கண்ணீர் வடிப்பார். ஞானியாக பட்டி மண்டபங்களில் கலந்து கொள்வார். பற்பல அம்சங்கள் ஒருங்கு சேர்ந்த பண்பட்ட உள்ளமுடைய உயர்ந்த மனிதனை நாம் இனி என்று காண்போம்.

இந்து சமய ஆலோசக சபையின் காரியதரிசி என்ற கோதாவில் சமயத்திற்காகவும், நீதிக்காகவும் செய்த தொண்டுகளைப் பாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன்.

**என். நவரத்தினம்,**
உயர் நீதிமன்றப் பதிவாளர்.

# மாதர் குல மாணிக்கம்

திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களை நான் கடந்த 15 ஆண்டு காலமாக அறிவேன். பர்த்தாவிற்கேற்ற பதிவிரதையாக, இந்துப் பெண்களில் ஒரு திலகமாக ஒளிவிட்டு மறைந்த இம் மாதின் புகழை வார்த்தைகளால் வர்ணிக்கவியலாது. அமைதியாக ஆனால் ஆழமாகக் கருத்துக்களை வெளியிட்டு எப்பொழுதும் எந்த விடயத்திலும் கணவரைக் கலந்தாலோசித்துப் பதில் தரும் இவரது பண்பு என் மனதைக் கவர்ந்தது. ஆலயங்களுக்கு இவர்கள் தம்பதி சமேதராக வந்து பவ்யமாகப் பூசை ஆராதனைகளில் பங்கு பற்றி அவசரக் குடுக்கைகளாக அவ்விடத்தை விட்டகலாது ஆறுதலாக ஆண்டவனைத் துதிக்கும் காட்சியை நான் பல தடவைகள் கண்டு மனப் பூரிப்படைந்துள்ளேன். வாழ்க்கையில் இதனைச் செய்ய வேண்டும்; இதனைச் செய்யக் கூடாது என்று வாய் வார்த்தைகளில் சொல்வதால் பயனில்லை. சொல்லும் செயலும் தொடர்புள்ளதாக வாழ்ந்து காட்ட வேண்டும். இதற்கிணங்க குடும்பத்தையும் பார்த்துக் கௌரவமாகச் சமூகத்திலும் பல தொண்டாற்றிக் கணவன் மறைந்த பிறகு உலகில் வாழ்ந்து பயனில்லை என்று அவரைத் தொடர்ந்து மறைந்து விட்ட திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் மாதர்குல மாணிக்கம் என்று எம்மால் என்றும் பாராட்டப்படத்தக்கவர்.

**திருமதி லீலா சுப்பிரமணியம்**
தலைவி, கொழும்பு இந்துமகளிர் மன்றம்.

❋ ❋ ❋

## இறைவனின் இன்னருள் — இரண்டு

1932-ம் ஆண்டு நான், எனது உத்தியோக காரணமாகப் பருத்தித்துறையில் வீடு அமர்த்த நேர்ந்தது. 1.9.26ல் விவாகமாகியும் — எங்கட்குப் பிள்ளைகள் இல்லை. கவலைகள் தீர்க்கும் கலியுக வரதன் — கண்டிக் கதிர்காமவேலனிடம் 1932 ஆடி மாதத்தில் வருடா வருடம் நடக்கும் விசேட விழாவுக்குச் சென்றோம். கதிர்காமத்தை அடையும்போது இருட்டி விட்டது. மலங்களை நீக்கும் மாணிக்க கங்கையின் குளிர் நீரை மேனியிலிட்ட பின், நாங்களிருவரும் கங்கையைக் கடந்து (அக்காலத்தில் பாலம் இல்லை) கரையில் துயின்று, விடியக் கங்கையில் நீராடினோம். ஆலயத்தை வலம் வந்து வழிபாடு செய்தோம். அடுத்த நாளும் கங்கையில் நீராடி விட்டு ஈரச் சேலையுடன் ஏழு மலைக்கந்தனை வழிபட மலை ஏறினோம். நாமிருவரும் குழந்தை முருகேசனிடம் குழந்தையில்லையே என்று குறையிரந்தோம். எனது மனைவி கண்மணியின் பாட்டியார் மெய் மறந்த பரவச நிலையில் ''அடுத்த முறை கதிர்காமம் வரும் போது நீங்கள் ஒரு பெண் மகவுடன் வருவீர்கள்'' என்று கூறினர்.

அடுத்த வருடத் திருவிழாவுக்கு முன் அதாவது 1933ல் எங்கள் மகள் ''சுசிலா'' பிறந்து விட்டாள்.

(ஸ்ரீஸ்கந்தராசா அவர்களது தினக்குறிப்பிலிருந்து)

# நயனேடு நன்றி புரிந்த பயனுடையார்

செந்தமிழ்மாமணி, சித்தாந்த வித்தகர்
**மு. வயிரவப்பிள்ளை**

சைவ சிகாமணி பொன் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் கீலக ஆண்டு மார்கழித் திங்கள் 10-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2 மணியளவில் சதய நட்சத்திரத்தில் *(24.12.68)* திடீரென இவ்வுலகை விட்டுப் பிரிந்த செய்தி கேட்ட எல்லோரும் அதிர்ச்சியும் அளவற்ற துக்கமும் எய்தினர். இப்பெரியார் பிரிவு, பிரதானமாகச் சைவ உலகத்திற்கு ஓர் பேரிழப்பு என்றே கூற வேண்டும். எங்கள் நாட்டிலே சென்ற பல ஆண்டுகளாகப் பல சைவப் பெரியார்கள் ஒருவர் பின் ஒருவராக மறைந்ததினுல் தத்தளித்துக் கொண்டிருக்கும் சைவ மக்கட்கு உறுதுணையாய் இருந்து உழைத்தவர் இப்பெரியார். உயர் நீதிமன்றத்தில் நீதியரசராய் உயர்ந்த பதவியிலிருந்து பெரும் புகழ் பெற்று இளைப்பாறியதும் அரசியலில் புகுந்து உயர் பதவிகள் பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தும் அவற்றை விரும்பாதும், சும்மா இருந்து சுக வாழ்வு வாழ்வதையும் கருதாதும் எம் செந்தமிழ் மொழியினதும் உயர்ந்த கொள்கைகளையுடைய சைவ சமயத்தினதும் தற்கால நிலைமை வருந்தத் தக்கதாய் இருப்பதை நன்குணர்ந்து சமயத் தொண்டுக்குத் தம்மை முழுதும் அர்ப்பணித்து வாழ்ந்தார். அப்பணியில் தலைசிறந்து அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராய்ச் சென்ற மூன்று ஆண்டுகள் செய்த தொண்டாகும். சமய முறைகளில் காலப் போக்கில் ஏற்பட்ட தீண்டாமை முதலிய குறைகள் நீங்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் தக்க பலன் பெறும் நிலை உருவாகி வருகின்றது. எல்லாம் வல்ல இறைவன் அடியார்க்கு அருள்புரிய எழுந்தருளும் கோயில்களில் சைவ சமயிகள் சிலரை உட்சென்று வழிபட இருந்து வரும் தடையைச் சிறிது சிறிதாக நீக்க 12 வருடங்களாகப் பாடுபட்டு வந்திருக்கின்முர். அதனுல் பல கோயில்களில் எல்லோருஞ் சென்று வழிபட வாய்ப்புண்டாயது. அவர் பிரிவதற்கு முன் ஆற்றிய இன்னெரு தொண்டு மிக முக்கியமானது. பல்லாயிரமாண்டுகளாக — அதாவது இராவணன் காலத்திற்கும் அப்பாற்பட்டதாய்ச் சரித்திரப் புகழ்பெற்ற சிவத்தலமாய் விளங்கியதும், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளால் 1350 வருடங்களுக்கு முன் தேவாரம் பாடிப் போற்றப்பட்டதுமான திருக்கோணமலையைப் பற்றியது. அத்தலம் இருக்கும் பிறெடறிக் கோட்டையின் ஒரு பகுதியைப் புனித சைவ நகராக்கவும் அக் கோட்டைப் பகுதியைப் பல வழிகளிலும் அபிவிருத்தி செய்யவும் ஆய்ந்து ஆலோசனை கூறியது. அரசாங்கம் அமைத்துள்ள குழுவிற்கு திருகோணமலையின் சிவத்தல மகிமையைப்பற்றி ஒரு விரிவான அறிக்கை இந்து மாமன்றத்தின் சார்பில் அவர் இவ்வுலகை விட்டுப் பிரிவதற்கு சில தினங்கட்கு முன் நிகழ்ந்த செயற்குழுக் கூட்டத்தின் அனுமதியுடன் அனுப்பியுள்ளார். அதில் உள்ள கோரிக்கை எம்பெருமான் அருளால் நிறைவேறும் என எதிர்பார்ப்போம். இன்று அவரைப் பல சமூகங்களும் சங்கங்களும் புகழ்ந்து பாராட்டுகின்றன.

உலகத்தில் எவர் பாராட்டப்படக் கூடியவர், எதற்காகப் பாராட்டப் படுவார் என்பதைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவப் பெருந்தகை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் கூறியதை இங்கு நினைவு கூருவது பொருத்தமாகும்.

அதாவது,

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

இதற்குப் பொருள் கண்ட சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகர் கூறிய தாவது — நீதியையும் அறத்தையும் விரும்புதலான் தமக்கும் பிறர்க்கும் பயன்படு தலுடையாரது பண்பினை உலகத்தார் கொண்டாட நிற்பர் என்று. இந்த இலக்கணத்துக்கு முற்றும் அமைய வாழ்ந்தவர் இப்பெரியார். இவருக்கு வாழ்க் கைத் துணையாய் வாய்த்தவரும் இவர் பிரிவினல் நோய்வாய்ப்பட்டு ஒரு கிழமைக்குள் தன் கொழுநன் சென்றவிடஞ் சேர்ந்தார். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த இத்தம்பதி கள் திருவள்ளுவர் கூறியது போல் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்பட்டுள்ளனர் எனலாம். அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்த பெருந் தொண்டு என்றும் பாராட்டற்குரியதாகும்.

❀ ❀ ❀

## இறைவனின் இன்னருள் — மூன்று

பருத்தித்துறையில் உள்ள ''காட்லிக் கல்லூரி'' (Heartly College) மாணவர் வர்களுக்கு உதைபந்தாட்டப் பயிற்சியளிப்பதற்காக 1933 அல்லது 1934ல் நான் போவது வழக்கம். எப்போதாவது நான் விளையாட நேர்ந்தால், கையில் இப்போதும் அணிந்துள்ள நீலக்கல் பதித்த மோதிரத்தைக் கழற்றி எனது மேலங்கி (Coat) யில் வைத்து ஒரு பையனிடம் பார்த்துக் கொள்ளும்படி கொடுத்தேன். ஆனல் மோதிரம் மேலங்கிக்குள்ளிருப்பதனைப் பற்றிப் பையனுக்கு அறிவிக்க மறந்து விட் டேன். வீட்டுக்குப் போகும்போது மோதிரத்தைத் தேடினேன். காணவில்லை. அடுத்த நாட் காலை கலாசாலை விடுதிக்குச் சென்று அப்பையனிடம் மோதிரத்தைப் பற்றி வினவி ஒரு பயனும் கிடைக்கவில்லை. விளையாட்டு மைதானம் முற்றும் தேடியும் கிடைக்க வில்லை. வைக்கற் பொதியில் ஊசியைத் தேடுவது போன்ற நிலையாயிற்று. வெறுங் கையுடன் வீட்டையடைந்து விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமானை நோக்கி வழி பாடு செய்தேன். என்னே அதிசயம்! கால் அடியில் கணையாழி காட்சி தந்தது.

(ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது தினக்குறிப்பிலிருந்து)

# "ஸ்ரீஸ்கந்தராஜா"
# ஓர் தியாக குடும்பம்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி சூழலில் உதித்த இளைப்பாறிய நீதியரசர் சைவ சிகாமணி பொன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் சிவபதமடைந்த ஞாபகார்த்தமாக கும்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் ஓர் மலர் வெளியிடுவது போற்றத்தக்கதே.

சட்டத் தொழில் ஆரம்பம்:

முதன்முதல் பருத்தித்துறை பொலிஸ் நீதிஸ்தலத்தில் வழக்கறிஞராக வாதாடத் தொடங்கிய அப்புக்காத்து திரு. பொன் ஸ்ரீஸ்கந்தராஜா அங்கு பலரும் மெச்சும் விதம் வழக்குரைத்து தனக்கென ஓர் தனி இடத்தை ஏற்படுத்தி படிப்படியாக உயர் வெய்தி அக்காலத்தில் கொழும்பு பொலிஸ் கோர்ட் (தற்போது நீதிபதி கோர்ட்) என அழைக்கப்பெற்று ஓர் மேல் நாட்டவரை நீதிபதியாகக் கொண்ட பொலிஸ் கோட்டிற்கு நீதிபதியாக நியமிக்கப்பெற்ற முதன் முதல் இலங்கையர் என்ற கௌரவத்தைப் பெற்றவர்.

அவருக்கு முன் விசாரணைக்கு வரும் பெலவீனப்பட்ட எதிரிகளை குற்றவாளியா? சுற்றவாளியா? எனக் கேட்கும் கேள்விக்கு எதிரிகள் சில வழக்குகளில் பலவிதமான பயங் காரணமாகவும் வழக்கு நடாத்துவதற்கு பொருள் வசதிக் குறைவு காரணமாகவும் குற்றவாளியென சொல்வதை அவருள் இயங்கும் ஓர் சக்தியின் காரணமாக அறிந்து ஏன் குற்றவாளி என சாற்றுகிறீர்? நீர் உமது விடுதலைக்குரிய காரணங்களைச் சொல்லும் எனக் கேட்டு வழக்கை விழங்கி எத்தனையோ சந்தர்ப்பங்களில் விடுதலைஅளித்திருக்கிறார். இது பலவீனப்பட்டவர்கள் சூழலில் அந்நாட்களில் கதை, கதையாகச் சொல்லப்படுவதை நாம் கேட்டுள்ளோம். இவ்விதம், ஏழை, பணம் படைத்தவர், உயர் நிலையில் உள்ளவறிஞ்ஞர் எல்ரையும் ஒரேவிதமாக நடத்திய நீதிபதியெனப் புகழ் பெற்றார். அல்லாமலும் நீதிபரிபாலனத்தில் உயர் அதிகாரிகளின் கட்டளைகள் நீதிக்குப் புறம்பாயுள்ளது எனக் கண்டால் அவைகளுக்கு கீழ்ப்படியாது அவர்களின் கட்டளைகளை பல சந்தர்ப்பங்களில் நிராகரித்தது சரித்திரப் பிரசித்தி பெற்றது. இவ்விதம் நேர்மையாகவும் துணிவுடனும் நடந்து தமது சுய நன்மைகளைத் தியாகஞ் செய்த தியாகி எனச் சொல்வது பொருந்தும்.

நீதி வழங்குவதில் வேகம்:

அவர்முன் விசாரணைக்கு வரும் வழக்குகளை வெகு விரைவில் விளங்கித் தீர்ப்பளிக்கும் செயல் வீரரெனப் பெயர் பெற்றார். யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றும் காலத்தில் மரண சாசன வழக்குகளை வருடக் கணக்கில் நடத்த விட்டு உரிமைக்கு வழக்காடி கைப்பொருளை வழக்காளியும் எதிரியும்

செலவு செய்ய விடாது வெகு விரைவில் விசாரித்து தீர்ப்பளிக்கும் சேவையைச் செய்துள்ளார். அல்லாமலும், கோவில் உரிமை, கோவிலில் பங்கு கேட்டு வழக்காடும் இந்துக்களின் சீமை ஓடு போட்ட வீடுகள், பனைஓலை வீடுகளாக மாற விடாமல் வழக்குகளை சில மாதங்களில், சில மணித்தியாலங்களில் தீர்த்து இரு பகுதியாரையும் திருப்திப் படுத்தும் ஓர் செயல் வீரராகத் திகழ்ந்தார். தீர்ப்பளிக்கும் துரித நடவடிக்கையினால் சம்பந்தப்பட்ட சிலரின் வெறுப்புகளைத் தேடிக் கொண்டதை அவர்காலத்தில் கதைகள் மூலம் அறிவோம்!

## ஆலயப் பிரவேசம்:

யாழ்ப்பாணத்தில் மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய பொழுது 1956-ம் ஆண்டளவில் தமிழ் சமூகம் ஐக்கியப்பட வேண்டும் என்ற பெரு நோக்கோடும், தீண்டாமையை ஒழிக்க வேண்டுமே என்ற ஆசையுடனும் ஆலயப் பிரவேச இயக்கத்தை தொடங்கி சிலரின் ஆதரவுடன் நல்லை கந்தன் போன்ற சில புகழ் பெற்ற கோவில்களின் முகாமைக்காரர்களின் அனுமதியுடன் ஹரிசனங்கள் உட்சென்று வணங்க நடவடிக்கை எடுத்தார்கள்.

இரண்டாம் முறையாக நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவின்கீழ் எம்மை விட்டுப் பிரியும் வரை ஆலயப் பிரவேசத்திற்காக உழைத்து பல கோவில்களின் உட் சென்று வணங்க வழி வகுத்தார்கள்.

## 1958-இருண்ட காலம்:

இலங்கையராகிய நாம் வெட்கித் தலை குனிய வேண்டிய, இலங்கையின் இனக் கலவரத்தில் குண்டர்கள் — தீய சக்திகள் படை எடுத்ததுபோல் திரண்டு அழிவு வேலைகளுக்காக முன்னேறுகின்ற வேளையில் அவரின் புத்திரர்களில் ஒருவர் தனிமையில் எதிர்த்து தற்காலிகமாக தீச்செயல்கள் பரவவிடாது தடுத்தது தமிழ்ச் சமூகத்தின் வீர உணர்ச்சியை எடுத்துக் காட்டும் செயலாகும். அம்மகனை ''வீரசிகாமணி'' என அழைத்தால் மிகைப்படச் சொல்வதாகாது. மேற்படி வீரச்செய்கை நடந்த அன்று தொடக்கம் திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் நோய்வாய்ப்பட்டதும் அன்னார் எம்மை விட்டுப் பிரியும் வரை நோயாளியாய் இருந்ததையும் நாம் அறிவோம். அல்லாமையும் மேற்படி நிகழ்ச்சிகளினால் அக்குடும்பம் மறைமுகமான பல இன்னல்களுக்கு இலக்காக வேண்டி ஏற்பட்டதையும் நாம் அறிவோம். எனவே ஸ்ரீஸ்கந்தராசா குடும்பம் சுயநலப்பற்றற்ற தியாக குடும்பமென்றே சொல்ல வேண்டும்.

## திருமதி கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா:

தமது அங்கத்தில் ஒரு பகுதிபோல் பதியின் நிழலில் நடமாடி தம்பதிகளின் வாழ்க்கைகளுக்கு உதாரண எடுத்துக்காட்டாக வாழ்ந்த அம்மையார், சமூகப் பண்பாடுகளைச் சரிவரக் கடைப்பிடித்து தியாக வாழ்வு வாழ்ந்த உத்தமியாகும்.

சமயச் சொற்பொழிவாற்ற கடல் கடந்து தமிழ் நாட்டிலிருந்து வரும் அழைப்பை ஏற்று அங்கு சொற்பொழிவாற்றிய சைவ மேதையாகும்; எம்மை விட்டுப் பிரியச் சில நாட்களுக்கு முன் கடைசி முறையாக கும்பனித்தெரு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஓர் சமயச் சொற்பொழிவாற்றிய பெருந்தகையாகும். தமது பதியின் சடுதி மறைவைத் தாங்கிக் கொள்ள முடியாது உடன் மரணத்தை விரும்பிய உத்தமி வயித்தியர்களின் சிகிச்சையின் மகிமையால் ஆறு நாட்கள் கழித்து சிவபதமடைந்தார் கள். அம்மையார் சமய அறிவாளியாயினும் ஓர் வயிராக்கிய எண்ணத்தால்தூண்டப் பெற்று தமது முடிவைத் தேடிக் கொண்டார்கள் என்றே கருத வேண்டும்.

அம்மையாரின் பிரிவு இந்துப் பெண்மணிகள் பழைய காலம் உடன் கட்டை ஏறும் செயலை நினைவுறுத்துகின்றது. எனவே, ஓர் தியாகச் செய்கை எனக் கருத வேண்டும்.

திருமதி திசைவீரசிங்கம்:

மட்டக்களப்பிலிருந்து தமது அண்ணனின் பிரிவை அறிந்ததும் கொழும்பு வந்து அவரின் மரணப் படுக்கைக்கு அருகில் நின்று சடுதியாக மூர்ச்சித்து விழுந்த சில நிமிடங்களில் இறைவனடி சேர்ந்தார்கள். மட்டக்களப்பில் பிரபல பிரமுகராகிய திசைவீரசிங்கத்தின் பாரியாராகிய இவ்வம்மையாரின் பூதவுடல் மட்டக்களப்பில் தக னம் செய்யப்பட்டது. இதுவும் ஓர் தியாகச் செயலென்றே கணிக்கக்கூடியதாகும்.

ஆடம்பரமற்ற சமய வாழ்வு:

எம்மை அறியாமலே நாம் மேல் நாட்டு நாகரீகத்தில் மூழ்கும் இக்காலத்தில் மேல்நாடு சென்று கல்வி கற்று உன்னத நிலையில் நிர்வாகம் வகிக்கும் தமது மக்களை பண்பாடும், ஆடம்பரமற்ற ஏழ்மை வாழ்வும் வாழப் பழக்கிய பெருமை போற்றத்தக்க தாகும். ஆடம்பரமற்ற ஏழ்மை வாழ்வை அந்தக் குடும்பத்தில் காணலாம். இதுஏனை யோருக்கும் ஓர் உதாரணமாகும்.

தெய்வ கருணை:

நீதியரசராகக் கடமையாற்றிய காலத்தில் அவரும் குடும்பமும் மயிரிழையில் உயிர் தப்பிய சந்தர்ப்பங்களுண்டு. உயர் நீதிமன்றத்திலிருந்து தமதில்லத்திற்குக் காரில் பிரயாணம் செய்யும் பொழுது வழியில் பெரும் மரம் முறிந்து காருக்கு மேல் விழ இருந்த சந்தர்ப்பம் தெய்வச் செயலால் ஓர் மயிரிழையில் தப்பியதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதேபோல் மலைநாட்டில் பிரயாணம் செய்யும் பொழுது றம்பொடை என்னும் மலைச்சரிவில் காரின் பிரேக் பலவீனமானதால் பள்ளத்தாக்கில் குடும்பத்துடன் விழுந்து நொருங்க வேண்டியவர்கள் தப்பிப் பிழைத்தது ஓர் தெய்வ செயலாகும்.

கொழும்பில் இரங்கற் கூட்டம்:

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் ஆதரவின் கீழ் பல சங்கங்களின் கூட்டு முயற்சியினல் ஓர் பெரும் அனுதாபக் கூட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் முன்னாள் மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக்க, இளைப்பாறிய பிரதம நீதியரசர் எம். சீ. சான்சோனி, இளைப்

பாறிய பிரதம பதில் நீதியரசர் ரி. எஸ். பர்ஞந்து, கொழும்பு மாநகராதிபதி ஜாபீர் ஏ. காதர், தலைவர் திவ்ய சிவன சங்கம் எஸ். ஏ. விஜயதிலக போன்ற இன்னும் பல சங்கப் பிரதிநிதிகள் அன்னாரின் குண விசேடங்களையும் எடுத்துச் சொல்லி சமூகத்திற்கும் சமயத்திற்கும் பொதுவாக இலங்கைக்கும் அவரின் மறைவு பெரு நட்டமென எடுத்துச் சொன்னார்கள்.

மக்கள் சிறப்பு:

இரு புதல்வர்களையும் இரு புதல்விகளையும் இரு மருமக்களையும் கொண்ட இக் குடும்பம் காலஞ் சென்ற பெரியார் இருவரினதும் அன்புமக்களாக, ஒரே குடையின் கீழ் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். ஒருவர் ஐக்கிய நாட்டில் கல்வியின் நிமித்தம் தங்கி உள்ளார். ஏனையோர் நிர்வாகப் பொறுப்புள்ள நிலையில் உள்ளனர். இக்குடும்பத்தினர் பெற்றாரினதும், மாமன் மாமியினதும் பிரிவால் ஏற்பட்ட ஆழ்ந்த கவலையை நீக்கி சிறப்புற வாழ்க்கை நடத்தி பெரியார்களைப் பின்பற்றி சமூக, சமயத் தொண்டுகளில் ஈடுபட்டு சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் சபையை நல்கு மாறு வேண்டிக்கொண்டு பிரிந்த எமது அன்புக்குரிய இருவரினதும் ஆத்மா சாந்தி அடையவும் வேண்டிக் கொள்வோம்.


சமாதான நீதவான்

**ச. த. சின்னத்துரை,**

## இறைவனின் இன்னருள் — நான்கு

எனது மூத்த மகளுக்கு இரண்டு வயது (1935) பூர்த்தியடைந்ததும் பேச்சுத் திறமையற்றவளாயிருந்தாள். ''அப்பு'' என்றும் ''ஆச்சி'' என்றும் இரு வார்த்தைகளுமே சொல்லத் தெரியும். அழகிய தோற்றமுள்ளவளாயிருந்தும் பேசுந் திறமையிழந்திருப்பதனை யோசித்து நாம் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டோம். எனவே மீண்டும் தண்டமிழ்த் தலைவன் — தரணிபுகழ் வேலன் — கதிரமலைக் கந்தனிடம் — சென்றோம். வழக்கம் போன்று கண்மணியும் நானுமாகக் கங்கையில் நீராடி எழும் போது ''ஆச்சி!'' என்று சுசிலாவின் குரல் கணீரெனக் கேட்டது. சுசிலா அப்போது தூரத்திலுள்ள மடத்தில் அதுவும் சனத்திரளில் சத்தமுங்கூட. எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அப்போது ஒருவர், ''அந்தப் பிள்ளைக்கும் மலைக்கு ஏறும் பாக்கியம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பது அதனுடைய குரலின் அடையாளம்'' என்று கூறினார். நான் உடனே சென்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்து கங்கையில் நீராட்டி ஏழுமலையானிடம் ஏறினோம். ஏறும்போதே தமிழின் ஏற்றத்தை சுசிலாவின் செல்லவாயில் நடமாடுவதனைக் கண்டு களித்தோம்.


ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது தினக்குறிப்பிலிருந்து



கோலாலம்பூரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராச்சி மகாநாட்டு மண்டபத்தில்
திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள் வீற்றிருப்பதைக் காண்க.



கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தாரால் கொண்டாடப்பட்ட
சேக்கிழார் விழாவில் திரு. பொன் ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள்.



விருதுநகர் மாதர் மணிவாசக சங்க சார்பில் நடைபெற்ற, சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜ 49-வது ஆண்டு விழாவில் திருமதி. கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா உரையாற்றுகின்றார். (1954)

# என்றுவுமைக் காண்போம் இனி!

ஐயா சிறீஸ்கந்த அண்ணலம ராவரிய
மெய்யான சேவையெலாம் மெச்சுகிருர் — மெய்சோரக்
கண்ணீர் வடிக்கின்ருர் காத்திருந்தோம் எத்தனைக்கோ
என்னேயுன் செய்கையம்மம் மா !

வீடு பெரிதாக விண்ணேர் அளித்தாரோ
கூடுவிட்டு மூவர் குடிபோக — நாடுகின்ற
மக்களொடு நண்பருயர் மைத்துனரும்நொந்தலற
இக்கொடுமை ஏன்செய் தனை.

வள்ளுவரும் வாசுகியை வாவென் றழைக்கவில்லை
தெள்ளுதமிழ் வாணரெவர் செய்தார்கள் — உள்ளம்
புரிந்தாயோ கண்ணும் கருமணியும் வேறே
பிரிந்திருப்ப தெப்படியாம் என்று.

மட்டுநகர் அம்பாரை மாவட்ட இந்துமன்றம்
நட்டதுன் கையாலே நாடறியும் — விட்டு
மழைபொழிய வென்றீசர் வான்நோக்கிச் சென்றனையோ
பிழையென்ன கண்டாயெம் மேல்.

நீதிக் கொருவ நிறைபண்பின் ஒருருவ
மாதிக்கெ லாம்புகழும் மாசிலணி — சோதிக்குள்
சென்று கலந்தனையே சேயிழைநற் சோதரியோ
டென்றுவுமைக் காண்போம் இனி.

**வே. சாமித்தம்பி,**
மட்டக்களப்பு—அம்பாரை மாவட்ட
இந்துமாமன்றம்.

# நீதியரசர் திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராஜா

நீதியரசர் அவர்கள் தம் அரச சேவையிலும் தனி வாழ்க்கையிலும் எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக விளங்கினர். தமிழ் மொழிக்கு உலகப் புகழை ஈட்டித் தந்த தமிழ் மறையாகிய திருக்குறளை வழிகாட்டியாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்தார்.

நீதியரசர் என்னும் பெயர்க் காரணத்திற்கேற்ப நீதித் துறையிலே கடமையாற்றினர்.

''சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி''

என்னும் திருக்குறளை முழுவதாகப் பின் பற்றினர். உயர்ந்தோர் தாழ்ந்தோர், பெரியோர், சிறியோர், தமர், பிறர் என்னும் வேறுபாடின்றி நீதி வழங்கினர். எதனையும் அனுதாபத்துடன் கேட்டு விசாரணை செய்தார்.

செயல்களால் வரும் பலாபலன்களைக் கவனியாது கடமையைச் செய்து வந்தார். தம் மனச்சாட்சிக்குச் சரியெனத் தோன்றியனவற்றைப் பயமின்றி வெளியிட்டார். கடமையைச் செய்வதிலும் கருத்துக்களை வழங்குவதிலும் மிக நேர்மையாகவும் மிக உறுதியாகவும் இருந்தார்.

உயர் நீதிமன்ற அரசர் ஆசனத்திலிருந்து தமிழிலே உரை நிகழ்த்தி முதன் முதல் உயர் நீதிமன்றத்திற் தமிழ் மொழிக்கு உயர்வை நாட்டிய பெருமை இவருக்கே உரியது.

இவர் கடவுள் பக்தியுள்ளவர். நீதி மன்றத்திற்குச் செல்லும் வழியில் கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்குவார். நாள் தோறும் கடவுள் வழிபாடு செய்து வந்தார்.

நீதிச் சேவைக் கடமைகளோடு சமய சமூகக் கடமைகளையும் செய்தார். பல சமயதாபனங்களின் உறுப்பினராயிருந்து வந்தார். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராக விளங்கியமை இவரது சமய சேவையின் உயர்வைக் காட்டும்.

சைவ ஆலயங்கள் சாதி வேறுபாடில்லாமற் கடவுள் வழிபாடு செய்வதற்குப் பயனக வேண்டுமெனக் கோவில் அதிகாரிகளை மேன்மேலும் வேண்டினர். இதனல் நற்பயன் கிடைத்து வருகின்றது.

இவரது மனைவியார் இவரது வாழ்வில் உறுதுணையாக விளங்கினர். அவரும் இவரைப் போன்று மிகப் பண்பும் அறிவும் உள்ளவர். இருவரும் ஒருவருக்கொருவர் கண்ணும் மணியும் உயிரும் உடலும் போன்றவர்கள். இவர்களது மறைவு இவ்வுண்மையைக் கட்டுகின்றது.

நீதியரசர் உயர்வுக்கு அவரது புகழேயன்றி அவர்களது பிள்ளைகளுஞ் சான்ருக உளர். பிள்ளைகளும் பெற்ரேரைப் போன்று மிக்க பண்பும் அறிவும் உள்ளவர்கள். நீதியரசரும் உயர்ந்த வாழ்வு வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அவர்களைப் பின்பற்றி நாமும் பயனடைவோமாக.

**வ. அருளம்பலம்,**
தலைவர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

# பீடுற வாழ்ந்து இறைபணி நின்றவர்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

நானிலம் போற்றும் நற்றமிழ்ப் புலவன் கூறிய இக்கருத்துக்கமைய இவ்வுலகில் வாழ்பவர் மிக மிகச் சிலரே. அவர்களோடு வைத்தெண்ணப்படத் தக்கவருள் திரு. பொன் ஸ்ரீஸ்கந்தராசாவும் ஒருவராவர்.

தமிழ் மூதாட்டியிடம் தமிழ்த் தெய்வம் அரியது எவையெனக் கேட்டபோது மானுடராதல் அரிதென்றார். அம்மானுடப் பிறவியிலும் கூன் குருடு பேடு நீங்கிப் பிறந்து ஞானமுங் கல்வியும் கிடைத்து அவற்றின் முதிர்ச்சியால் தானமுந் தவமும் சிறந்ததெனத் தெளிந்து தாமே அதில் ஈடுபடுதல் அரிதிலும் அரிதாகும். இவ்வகை இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தார் மேற் சுட்டிய பெரியார்.

முன்செய் தவப்பயனால் நுண்மாண் நுழைபுலம் உடையவராய்ச் சட்டத் துறையில் உயர்ந்த இடத்தை வகித்தார். நீதித் துறையில் நேர்மையையும் அஞ்சாமையை கொண்டு தன் கடமையைச் செவ்வனே ஆற்றினார். நடுநிலை தவறாது நீதி வழங்குவதில் மிகக் கண்ணுங் கருத்துமாக இருந்தார். ''நீதி செய்வதல்ல முக்கியம். நீதி செய்யப்படுகிறது என்பதை மற்றவர் உணரச் செய்வதே முக்கியம்'' என்ற கருத்தை அவர் அடிக்கடி கூறி வந்துள்ளார். சுதந்திரமாகக் கருத்தைத் தெரிவித்துத் தன் கடமையைச் செய்ததைக் கண்டோம். பதவிக் காலத்தில் தம் முழுக் கவனத்தையும் சட்டத் துறையிலும் நீதித் துறையிலும் செலவழித்த போதிலும் சமூகத் தொண்டிலும் சமயத் தொண்டிலும் சமயத் துறையிலும் எங்கெங்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றதோ அங்கே தம் சேவையை அர்ப்பணித்தார். தமிழ்ப் பணிக்கும் சமயப் பணிக்கும் முழுநேரத் தொண்டு செய்யக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியது அவர் தம் பதவியிலிருந்து இளைப்பாறியமையே

தன் சேவை சமூகத்திற்குத் தேவையென்பதை உணர்ந்து சைவப் பெருமக்கள் இந்துமாமன்றத் தலைவராக இருக்க வேண்டியபோது ஏற்றுக் குறுகிய தமது பதவிக் காலத்து அளப்பரிய சேவையாற்றினார். சமயத் துறையினர்க்கும் சமூகத் துறையினர்க்கும் இடையே ஒரு தொடர்புப் பாலமாக இருந்து காலத்துக்கு ஏற்ற மாற்றம் நடைபெற வேண்டுமென்ற கொள்கையை மக்களிடையே ஆணித்தரமாக மெல்ல மெல்ல எடுத்தியம்பி வந்தார்.

சமூகம் ஒழுக்கமுடையதாக அமைய வேண்டின் சமய வாழ்வு அவசியம் என்பதை உணர்ந்தவர் இப்பெரியார். தனது அன்றாட வாழ்க்கையில் சமய ஒழுக்கம் மிளிர வாழ்ந்தார். சிறார்களுக்கும் பெரியார்களுக்கும் பல இடங்களில் சமயக் கருத்துக்களைக் கூறி அவ்வழி ஒழுகச் செய்தார்.

இவ்வளவும் இவர் தம் வாழ்வில் இலங்கியமைக்குக் காரணம் இவர் தம் இல்லக்கிழத்தியும் இவர்க்கேற்றவாறு இயைந்தமையே. ''இல்லதென் இல்லவள் மாண்பானுல்'' என்ற குறளுக்கு இலக்கணமாக அமைந்தார் இவர் தம் இல்லக் கிழத்தியாகிய கண்மணி அம்மையார். கண்மணி அம்மையார் இப்பெரியார்க்குக் கண்மணியாகவே — கண்ணின் மணியாகவே அமைந்தது பெருஞ் சிறப்பாகும்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோர்விலா வாழ்வு நடத்தித் தன் கணவனைத் தெய்வமாக மதித்து வாழ்ந்தார் அவ்வம்மையார். கணவன் என்ற சொல் கண் — அவன் என்ற பொருள் அமைவதற் கொப்பக் கண் பிரிய அது இன்றி உயிர் வாழ விரும்பாத அம்மையார் தாமும் தன் கணவன் அடிச் சுவட்டைப் பின்பற்றினர்.

மக்கள் எல்லோரும், சிறப்பாகச் சைவத் தமிழ் பெரு மக்கள் அனைவரும் இவர்களின் வாழ்க்கை அமைந்த முறையினை நன்கு சிந்தித்துத் தம் வாழ்விலும் தீயன கடிந்து நல்லன ஓம்பிப் பீடுற வாழ்ந்து இறைபணி நிற்றலே யாம் இப்பெரியார்க்குச் செய்யக் கூடிய அஞ்சலியும் நன்றிக் கடனுமாகும்.

**மு. திருஞானசம்பந்தன்,**
செயலாளர்,
அகில இலங்கைச் சைவப் புலவர்
சங்கம்.

❉ ❉ ❉

## இறைவனின் இன்னருள் — ஐந்து

1945-ம் ஆண்டு மாசி மாதம், மாத்தறையில் நான் மேலதிக மாவட்ட நீதிபதியாக இருந்தபோது அப்போதிருந்த உதவி அரசாங்க அதிபர் வதியும் மலைச்சாரல் உள்ள (Perowness Hill) இடத்துக்குச் செல்ல நேர்ந்தது. எங்கள் வாகனச் சாரதி லீவில் இருந்த படியால் பதிலுக்கு ஒருவரை நியமித்துச் சென்றோம். அந்தப் பாதையில் போவது இதுவே முதன் முறை. கரடு முரடானதும் வளைவுகள் நிறைந்ததுமான பாதை. ஏதோ ஒரு நீர்க் கரையை அடுத்த சுவரை முட்டுவதனைத் தவிர்ப்பதற்காக சாரதி வாகனத்தை நிற்பாட்ட முயன்ருர். வாகனம் பின்நோக்கிச் சென்றது. சாரதி தனது கைப்பிடியைத் தளர விட்டு விட்டார். எனது இடது பக்கத்தில் ஆழ்ந்த பாதாளப் பாதை கடலை நோக்கியபடி. பாதை ஓரத்தில் நாட்டப்பட்டிருக்கும் வெள்ளை மை பூசப்பட்ட கற்றூண்களில் ஒன்றிலாவது மோதி வாகனம் நின்று விடும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தேன். வாகனத்தின் வேகம் அதிகரிக்க என் கண்ணின் மணியான மனைவி ''கண்மணி'', ''கதிரவேல்'', ''கதிரவேல்'' என்று கத்தினுள். வாகனம் நின்று விட்டது. நாங்கள் வாகனத்திலிருந்து இறங்கி, மோசமாகச் சிக்குண்ட எங்கள் வாகனத்தைப் பார்த்தோம். அதிசய பலனாக இடது சில்லின் மேல் மூடி (Mudguard) முறிந்த ஒரு தென்னை மரத்தின் அடிப்பாகத் துண்டுக்குள் மாட்டப்பட்டுக் கிடந்தது. பின்பு பல ஆட்கள் சேர்ந்து, வாகனத்தை மீண்டும் பாதையில் ஓட உதவி செய்தார்கள். மனைவியின் கூக்குரலைக் கேட்டு வந்தவர்கள், அக்குரலின் கருத்து என்ன என்று கேட்டார்கள். ''கதிர்காமம் உறை கந்தனைக் கூவி அழைத்து உதவி விண்ணப்பித்தது'' என விளக்கினேன்.

(ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களது தினக்குறிப்பிலிருந்து)

# " நேரம் பொன் அல்லவோ "

**த. தில்லையம்பலம்,**

*(கௌரவ செயலாளர், இந்து சன்மார்க்க சங்கம், உனுப்பிட்டி, வத்தளை)*

1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணி. சைவ சிகாமணி பொன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களும் அவரை நிழல்போற்றொடரும் வாழ்க்கைத் துணையும் இவர்களின் மனைமாட்சிக்கு நன்கலமாகிய மூத்த மகளும் காரிலிருந்து இறங்குகின்றனர். உனுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கத்தினர் தங்களுடைய பத்தொன்பதாவது ஆண்டு நிறைவு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாட ஒழுங்குகள் செய்திருந்தனர். சங்கத்தின் உப-போஷகராக பல ஆண்டுகள் சேவை செய்து வந்த ஒரு சைவப் பெரியாரை தலைமை வகிக்க அழைத்திருந்தனர். விழா 6.00 மணிக்குத் தொடக்கம். இதோ தலைவர் வந்து இறங்கி விட்டார். சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் மேடைக்கு அவர்களை அழைத்துச் செல்கின்றேன். நேரம் செல்கின்றது. 6.00 மணி. விழாத் தொடங்கும் நேரமாய் விட்டது. தலைவர் பக்கம் சென்று மிகவும் தாழ்ந்து விநயத்துடன் காதோடு காதாகச் சொல்கிறேன், ''மன்னிக்க வேண்டும் ஐயா. இவ்விடத்தில் சனங்கள் வந்து சேர கொஞ்ச நேரம் பிடிக்கும். சற்றுத் தாமதித்து விழாவை ஆரம்பிக்கலாமோ?'' தலைவர் முகத்தில் ஒரு புன்னகை. நீதி மன்றத்தில் கடமை புரியும் பொழுது காணப்படும் கடுமை எங்கே? ''நீர் அதைப் பற்றிக் கவலைப்படாதேயும். தமிழர் எந்தக் கூட்டம் வைத்தாலும் குறித்த நேரம் தொடங்குவதில்லை. அது தமிழனின் சாபக் கேடு.'' முகத்தில் ஒரு வேதனைக் குறி. ஆம், புரிந்து கொண்டேன். மகாத்மா காந்தியினுடைய வாழ்க்கைச் சரிதத்தில் ஓர் நிகழ்ச்சி. காந்தி அண்ணல் ஒரு கூட்டத்திற்கு துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கின்றார். ஒரு சக்கரம் பழுதடைகின்றது. வண்டியை ஓர் இடத்தில் நிறுத்தி வைத்து விட்டு வேகமாய் நடந்து செல்கின்றார். 10 நிமிடம் தாமதமாய் விட்டது. கூடியிருந்தவர்களிடம் மன்னிப்புக் கேட்கின்றார். கற்றவர்களென்று கூறும் நாமே நேரத்தின் அருமையை உணராத பொழுது சாதாரணப் பாமர மக்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? அதை அனுபவத்தில் கண்டு போலும் வள்ளுவப் பெருந்தகையும் எம்மை நோக்கி அறிவு புகட்டுகின்றார்,

> ''நாள் அது ஒன்றுபோற்காட்டி — உயிர் ஈரும்
> வாள் அது உணர்வார்ப்பெறின்''

நாம் தாம் உணர்கின்றோமிலலை. நேரம் செல்கின்றது. 6.30 மணி. விழாவைத் தொடக்கி வைக்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றோம். நிகழ்ச்சிகள் எல்லாம் நேரங்கடந்து எல்லை மீறுகின்றன. 9.00 மணிக்கு முடிவெய்த வேண்டிய நிகழ்ச்சிகள் 10.00 மணிக்கு முடிவெய்துகின்றன. எவ்வித அலுப்பும் சலிப்பும் தலைவரிடமோ அல்லது அவருடைய சகதர்மிணியிடமோ காணப்படவில்லை. நடேசர் ஆலயத்தில் பூசை நடைபெறுகின்றது. பிரசாதம் பெற்று விடைபெறுகின்றனர் அந்த உத்தம குடும்பத்தினர். இவை எல்லாம் பழைய கதை. ஆனல் ''தமிழனின் சாபக் கேடு'' இன்றும் தான் தீர்ந்தபாடில்லை.

# சைவத்திருகண்கள்

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலால்
தோன்றலிற் றோன்றாமை நன்று''

என்றியம்பினர் செந்நாப் போதார். இக்குறளுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர்கள் பொன் ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள்.

யாழ்ப்பாணத்தில், வடமராச்சிப் பகுதியில் தொண்டைமானாறு என்று ஒரு சிறந்த இடமுண்டு. அந்தச் சிறந்த இடத்தில் செல்வச் சந்நிதி என்ற சிறந்த தல மொன்றுண்டு. அத்தல தெய்வம் முருகப் பெருமான்.

இச்செல்வச் சந்நிதிப் பெருமானுக்கு விசேட உற்சவங்கள் நடைபெறுவது வழக்கம். பக்தர்கள் கூட்டங் கூட்டமாக வந்து தரிசித்துத் திருவருளைப் பெற்றுச் செல்வது யாவரும் அறிந்த விடயம்.

அன்றொரு நாள்; சந்நிதிப்பதி; இராக்காலம்; பெருமானாரின் உற்சவ காலம்; முருகப் பெருமானார் வீதி வலம் வந்து கொண்டிருந்தார்; பொன் ஸ்ரீஸ்கந்தனரின் கைகள் தூய வெண் சாமரம் இராட்டின. அவரது துணைவியாரின் தலையில் கர்ப்பூரச் சட்டி. அதே போல அவரது மகளாரின் தலையிலும். இதைப் பார்த்த எமது உள்ளம் ஆனந்தம், ஆச்சரியம், அச்சம் என்பவைகளால் நிறைந்திருந்தது. முன்னிலும் பார்க்க ஆத்மீகப் பற்று எம்மிடை வளரத் தொடங்கிற்று. உயர் நீதி மன்றத் தலைவராக வரக் காரணமாக இருந்தது இவரது சிவபக்தி என்றுஉணர்ந்தோம். இந்தச் சிறந்தவரின் வாழ்க்கைத் துணைவியாராகும் வாய்ப்பு அந்தக் கண்போன்ற கண்மணி அம்மையாருக்கும் கிடைத்த காரனம் சிவபக்தி என்று உணர்ந்தோம். ''பெற்றோரைப் போலவே பிள்ளைகள்'' என்பது சொல்லாமலே விளங்குமன்றோ.

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே'' என்ற ஆன்றோர் கூற்றுக் கிணங்க பொன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களைக் கொழும்பிலுள்ள சிவஸ்தலங்களில் காணும் வாய்ப்புப் பெற்றவர்கள் யாம். கோவில்களில் வணங்குவதைப் பார்த்தால் பெரும் ஆனந்தமாகவே இருக்கும். கண்மணி அம்மையாராம் இவரது வாழ்க்கைத் துணைவியாரும் அவரது மக்களும் இவ்வாறே அமைதியாக வணங்குவது பார்ப்பதற்கு மிகவும் உருக்கமாகவே இருக்கும்.

இந்து மாமன்றத் தலைவராக இருந்தார்; சமரச நோக்காக இருந்தார்; உண்மை வழி நின்று நீதி வழங்கினர். நீதி நூல்களைக் கண்போலப் போற்றினர். கூட்டங்களுக்குச் சமேதராக வந்து தலைமை தாங்கி அறிவுரைகளை அள்ளி வழங்கினர். அவரது அம்மையாரும் அறிவுரைகளை ஆற்றொழுக்குப் போலத் தூய தமிழில் அள்ளி அள்ளிச் சொற்பெருக்காற்றினர். மக்கள் உள்ளம் மலர்ந்தது. இவர்களது உயரிய பொதுச் சேவையை உலகம் என்றும் போற்றுமென்பது எமது உறுதியான நம்பிக்கை.

''உள்ளத்தாற் பொய்யா தொழுகின் — உலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்''

என்பது தெய்வப் புலவரின் தேன் மொழியன்றோ.

பொன் ஸ்ரீஸ்கந்தராஜாவினதும், அவரது வாழ்க்கைத் துணைவியாராம் கண்மணி அம்மையாரதும் ஆன்மா சாந்தி அடைவதாக.

சுபம்! சுபம்!!

**சு. பாலசிங்கம்,**
கௌரவ பொதுச் செயலாளர்,
வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்.

உ

# நீதியே நீ சோதியோ!!

1. அன்பர் அடியார் கூடி யழ
அருமை மனையாள் பதைத்து விழ
அண்ணு என்று தங்கை சொலி
அன்பின் பிணையில் உயிர் நீக்க
மன்றில் மாந்தர் வாடி வர
மகிதல வாழ்வை வெறுத் தின்று
சென்ற தெங்கே செப்பிடுவீர்
செய்தது முறையோ நும் செய்கை!

2. சாதி சமய பேதமின்றி
சத்திய விரதம் காத்து மிக
ஓதிய கலையின் துணை சேர
ஒன்றே பரமன் எனத்தேறி
நீதி வழுவா நெறி நின்று
நீதி யரசன் என வாழ்ந்து
சோதி யாக நீர் சென்றீர்
சோர்ந்து நாமும் கதறிடவே!

3. ஆங்கி லமும் செந் தமிழும்
அரிய சமய சாத்திரமும்
பாங்கு பெறத் தான் பயின்று
பாரில் பலர் பயன் பெறவே
தேங்கு மன்பு கரை புரள
தேடிச் சமயத் தொண் டாற்றி
ஓங்கு புகழ் சேர் ஸ்ரீஸ்கந்த
ராஜா உம்மை மறவோமே!

**கே. எஸ். நாதன்.**
கொழும்பு அருளொளி நிலையம்.

# பழியஞ்சி வாழ்ந்தவர்

இருபதாம் நூற்றாண்டில் தமிழன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வர்களுள் முன்னணியில் நிற்பவர்களுள் ஒருவராக விளங்கியவர் காலஞ் சென்ற நீதியரசர் பொன் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள். அவர் ஒரு சிறந்த கல்விமான், நீதிமான், சிறந்த சைவ ஒழுக்க சீலர். கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்ற குறளமுதத்திற்கு இலக்கணமாய் வாழ்ந்தவர். அவர் வேறு துறைகளில் சேவை புரிந்து பொருளீட்டும் தகைமை பெற்றிருந்தும் பழியஞ்சி வாழ்ந்தவர் ஆகையால், நீதி பரிபாலனத் துறையில் சேர்ந்து தம் கடமையை மக்களுக்கு ஆற்றத் துணிந்தார். கற்றதன் அழகு நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையில் நின்றொழுகலே என்ற குறிக்கோளுடையவராய் வாழ்ந்தவர். அதனால்தான் நடுவு நிலைமைச் சாதனையில் காப்பாற்றக் கூடிய நீதிபதித் தொழில் புரிய விரும்பினார். தமது கடமையை ஆற்றும்போதும் கடவுளின் அனுக்கிரகத்தோடேயே ஆற்றினார். அவர் நீதிமன்றங்களுக்குச செல்லும் போதும் அங்கிருந்து வீடு திரும்பும் போதும் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டுச் செல்வது அவர் வழக்கம். இதிலிருந்து புரிந்து கொள்ளக் கூடிய உண்மையென்னவெனில் நீதிமன்றத்தில் தாம் வழங்கும் தீர்ப்புக்கள் புனிதமாயிருக்க வேண்டுமென்பதுவும் அது எவருக்கும் பாதகமாய் இருக்கக் கூடாது என்பதுவும் அதற்கு இறைவனே தம்மை வழிநடத்த வேண்டுமென்னும் எண்ணம் அவர் சிந்தையில் குடிகொண்டிருந்தன என்பதாகும். நீதி மன்றத்தில் அரசனாயினும் சரி ஆண்டியாயினும் சரி எல்லோரும் சமம் என்ற கண் கொண்டு அவர் நோக்கியது போலவே இறைவனுடைய சந்நிதியிலும் உயர்ந்த தாழ்ந்த சாதி என்ற வித்தியாசம் இன்றி எல்லோரும் இறைவனின் குழந்தைகள் — அவன் சந்நிதியில் எல்லோரும் சமம் என்ற பெரு நோக்குடையவராக விளங்கினார். அதனாற்றான் அவர் அந்த வேறுபாடுகள் எம் சமூகத்தின் சாபக்கேடு என்று அதை ஒழிப்பதற்காக அயராதுழைத்து வந்தார். அவர் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராயிருந்து ஆலயப் பிரவேச இயக்கத்தை வழி நடத்திச் சென்று தமிழர் வாழும் பகுதிகளிளெல்லாம் தீண்டாமையை எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்தார். எமது சைவத்தின் வளர்ச்சிக்காக இன்னும் பல சைவ ஸ்தாபனங்களில் முக்கிய உறுப்பினராயிருந்து தொண்டு புரிந்தார். அவர் இழப்பு சைவ மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். எமது திருக்கேதீச்சர புனருத்தாரண சபையின் முக்கிய உறுப்பினராய்ப் பலகாலம் இருந்து எமக்கு அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகள் கூறி எமது சபையின் நோக்கம் நிறைவேறுவதற்கு உறுதுணை புரிந்து வந்தார். அவரின் சேவையும் உதவியும் எமது சபையின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாயிருக்கும் இந்நிலையின் அப்பெரியார் எம்மை விட்டுப் பிரிந்தமை எமது திருக்கேதீச்சர புனருத்தாரண சபைக்கு ஒரு பெரும் இழப்பாகும். அவர் பிரிவால் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்ந்திக் கொண்டிருக்கும் எமது சபையார் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக திருக்கேதீச்சரத்தானைப் போற்றிப் பரவுகின்றோம்.

EVELYN RUT INSTITUTE JAF
212
REFER E
LIBRARY

**V. அல்லிராசா,**
செயலாளர்,
திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபை.

# வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

திரு. பொன் சிறிஸ்கந்தராஜாவினதும் அவருடைய பாரியாரினதும் மறைவு தமிழுக்கும் சைவத்திற்கும் தெளிந்த வானத்திலிருந்து விழுந்த இடியைப் போன்று எங்கள் அனைவரையும் துக்க சாகரத்தில் ஆழ்த்தியிருக்கிறது. திரு. சிறிஸ்கந்தராஜா அவர்கள் தாம் நீதியரசராகக் கடமையாற்றுங்காலை நீதி மன்றத்திற்கே ஒரு அணியாக இருக்கும். அத்துடன் தமது வாழ்க்கையையும் எங்கள் கலாசாரப்படி அமைத்து தமிழர்க்குள்ளும் தலைசிறந்து விளங்கினார். அவர் நீதிமன்றத்தில் சிறந்து விளங்கியமையையோ அன்றி அவரது குற்றமற்ற வாழ்க்கையைப் பற்றியோ கூறுவதென்றால் முடியுமானதல்ல. அவருடைய நற்குணங்களை யாவரும் அறிவார். அவருக்கு வாய்த்த பாரியாரோ தம்முடைய வாழ்க்கையை தமிழ்ப் பெரும் பெண்மணிகள் போலமைத்து தமக்கு எத்தகைய செல்வமும் பதவியும் வந்த போதிலும் கணவனைக் கடவுள் போல் மதித்து இலங்கையில் அதிலும் கொழும்பு மாநகரில் வாழும் தமிழ்ப் பெண்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருந்து வந்தார். அந்த அம்மையாரின் பதிபக்திக்கு, தம் கணவன் இறந்து சின்னாட்கட்குப் பின் தாமும் அவரைப் பின் தொடர்ந்ததைவிட வேறு சான்று வேண்டியதில்லை.

திரு. சிறிஸ்கந்தராஜா ஒரு சிறந்த சைவ பக்தராகவும் விளங்கினார். சைவம் என்றால் அவருக்கு உயிர். நீதி மன்றத்திலிருந்து ஓய்வு பெற்றபின் அவர் மத விஷயமாக பல அரிய தொண்டுகளைச் செய்தார். எங்கள் கோவில்களை சாதி பேத மின்றி எல்லோர்க்கும் திறந்து விடும்படியாகப் பாடுபட்டவர்களில் அவர் ஒருவர். அவருக்கு தமிழ்க் கலைகளிலும் வெகு ஆர்வம் உண்டு. இசை மன்றம் ஒன்றிற்கு அவர் தலைவராக இருந்து அவ்விடமும் அரும்பணி ஆற்றினார்.

அவர் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றவிருந்த தொண்டுகள் இன்னும் மிகப் பலவென்பதை நான் அறிவேன். ஆனால் அவர்களை அதற்குமுன் இறைவன் தன் திருச் சமூகத்திற்கு அழைத்துக் கொண்டார்.

திரு. சிறிஸ்கந்தராஜாவினதும் அவருடைய பாரியாரதும் வாழ்க்கை தமிழ் மக்கள் அனைவருக்கும் ஒரு எடுத்துக் காட்டாக இருப்பது

''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்''.

**சுப்பிரமணியம் கணேசராஜா.**
உதவிக் கட்டுப்பாட்டதிகாரி,
குடிவரவு குடியகல்வு இலாகா.

# நான் பார்த்த நீதவான்

**ம. சி. சிதம்பரப்பிள்ளை,**
(கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச்சங்க சமயப்பிரசார தலைவர்.)

அரசாங்க அலுவலகங்களிலிருந்து, அரசாங்க சார்பில் ஏதாவது கொப்பிகள், இடாப்புகள், கணக்குப் புத்தகங்கள், கோட்டுக்குச் சமர்ப்பிக்க ஏற்படின் அப்படிப் பட்ட வழக்குகளை, கோடு தொடங்கியதும் தமக்கு முன்னிலையில் கொண்டு வர வேண் டும் என்பது, எங்கள் நீதவான் துரையினது கட்டளை. வீணாக ஓர் அரசாங்க ஊழியன் தனது அலுவலக வேலையை விட்டொழித்து, கோட்டில் வந்து நித்திரை கொண்டு, ஒரு முழு நாளையும் கழித்து, அன்று அலுவலக வேலைகளையும் செய்யாமல் மேசையில் குவிய வைப்பதனை அறவே வெறுத்தார்.

சைவச் செம்மல் பொன் ஸ்ரீஸ்கந்தராசா யாழ்ப்பாணத்தில் பெரிய கோட்டு நீதவானாக இருந்த காலத்தில், இலங்கைப் பதிவாளர் தலைமை அதிபதி அவர்கள் சார் பில், நான் யாழ்ப்பாணம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் காலங் களில், அவ்வப்போது நீதவான் முன்பாக வரும் பெயர் மாற்றம், பெயரிடுதல், பிறப்புப் பத்திரத்தில் உள்ள பிழை திருத்தங்கள் சம்பந்மான தவழக்குகளுக்கு, அலுவலகத்தில் உள்ளசம்பந்தமான இடாப்புகளை யானே எடுத்துக் கோட்டில் சமர்ப்பிப்பது வழக்கமா யிருந்தது.

ஒரு நாள் கொழும்பிலுள்ள தலைமைப் பதிவாளர் அதிபதியிடமிருந்து மாவட்ட பதிவாளருக்கு ஓர் பிறப்புச் சாட்சிப் பத்திர சம்பந்தமான வழக்குக்கு முன் அறிவித்தல் வரப் பிந்தி விட்டது. பெரிய கோட்டில், வழக்கு ஆரம்பமானதும், வழக்கமாக பதி வாளர் தலைமை அதிபதியை கோட்டு முதலியார் கூப்பிட்டிருப்பார். ஒருவரையும் கோட்டில் காணுதபடியால் நீதவான் அதற்குரிய வழக்குக் கொப்பியைப் பற்றி யோசிப் பதற்கு ஒதுக்கி வைத்திருந்தார்.

எனது கந்தோருக்கு சரியாக 10.30 மணியளவில் விசேட தபால் ஊழியன் ஒருவர் ஓர் அதிமுக்கிய கடிதம் ஒன்றை, தலைமை அதிகாரியிடம் ஒப்படைத்தார். அந்த உறையைப் பிரித்துப் பார்த்ததும் எனக்குக் கட்டளை பிறப்பித்தார். உடனே வழக்குக்குரிய கொப்பிகளைச் சரிபார்த்து உடனே, விசேட வண்டி அமைத்து, பெரிய கோட்டுக்கு துரிதமாகச் சென்றேன்: போகும் போது துரித சேவையில் வந்த கடித மேலுறையுடன் சென்றேன்.

''உங்கள் சுகத்துக்காக உங்கள் வழக்குகளை முன் கூட்டியே எடுத்து முடிப்பது தெரியுமல்லவா? எங்கே உம்மை அழைக்கும் போது இருந்தீர்? வழக்குக் கூப்பிடும் போது அதற்குரியவர்களில்லாது விட்டால் எல்லாருக்கும் இடைஞ்சல் அல்லவா? என்று என்னைக் கடிந்தார்.

நான் மிகவும் அடக்கமாக, எனது கையில் உள்ள தபால் உறையை நீட்டி அவருக்குக் கொடுத்துவிட்டு, நடந்த விபரத்தையும் கூறினேன்.

ஆங்கிலத்தில், '' I am deeply sorry '' என்று எனக்குக் கூறினர். பெரிய மழை பெய்து அடங்கியது போன்றிருந்தது.

வழக்கு முடிந்ததும் நான் உடனே அலுவலகத்திற்குத் திரும்பி விடவேண்டும். இதுவே நீதவானுடைய விருப்பமாகும்.

திரு. பொன் ஸ்ரீஸ்கந்தராசா கோட்டுக்கு வந்து வழக்குகள் விசாரிக்கும் போது அவர் ஒரு கலாசாலை அதிபதி போன்று, மிகவும் சாதுரியமாகச் சில வழக்கறிஞர்களை வாட்டுவதைக் காண, ''ஏன் இவர்கள் இத்தொழிலுக்குப் படித்தார்கள்'' என்று எண் ணவும் நேரிடும். மிகவும் கண்டிப்பான நீதவான் என்பதே நான் கண்ட நீதவான்.

# நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

## பிறப்பு:

புகழ்மிகு செல்வச் சந்நிதிப் பெருமான் எழுந்தருளியுள்ள தொண்டமானாற்றிலே 1905-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் எட்டாம் திகதி பிறந்தார்.

## பெற்ருேர்:

தந்தையார் பெயர்: இராமசாமி பொன்னுத்துரை. அன்னை பெயர்: மாணிக்கம் (கற்பகம் என்றும் அழைக்கப்பட்டவர்) இவர் நாகப்பர் முருகுப்பிள்ளையின் மகளாவர்.

எமது புராண வரலாற்றின்படி கற்பகதரு (கற்பக மரம்) மக்களுக்குக் கேட்டவற்றையெல்லாம் கொடுத்து அவர்களை மகிழ்விக்கும் தேவதாரு.

இவரின் தந்தையாகிய பொன்னுத்துரை அவர்கள் பொத்துவில் கிராமத்தில் ஓவசியராகப் பலகாலம் தொழில் புரிந்தவர். அன்றிருந்த சூழ்நிலையில் அவர் நல்ல நிலையில் உள்ளவராக விளங்கினர். பொத்துவில் கிராமத்தில் அவர்களுக்குச் சொந்தமாக இருந்த நிலபுலன்கள் தர்ம கைங்கரியத்திற்காகவே பயன்படுத்தப்பட்டு வந்தன. பொத்துவில் கிராமத்தில் அவர்கள் ஒரு பிள்ளையார் கோவிலைக் கட்டுவித்ததுடன் அக்கோவிலுக்கு அணித்தாகவுள்ள ஐந்து ஏக்கர் காணியையும் அக்கோவிலுக்கு உபயமாக வழங்கியுள்ளார். யாத்திரீகர்கள் கதிர்காமத்திற்குச் செல்லும் போதும், கதிர்காமத்திலிருந்து திரும்பும் போதும் அடியார்களுக்கு உணவும் தங்குமிட வசதிகளும் அளித்து தொண்டு புரிந்து வந்தனர்.

இவரின் பெற்ருேர் கதிர்காமக் கந்தன் மீதும் செல்வச் சந்நிதி முருகன் மீதும் அளவு கடந்த பக்தியுடையவர்களாதலால் தங்களுக்கு அருமையாகப் பிறந்த மூத்த புதல்வனுக்கு கதிர்காமக் கந்தனின் திருநாமமாகிய ஸ்ரீஸ்கந்தராஜா எனும் பெயரைச் சூட்டினர். இன்னும் இவர் குடும்பத்தில் இராணி என்ற ஒரு சகோதரியும் பாலசுந்தரம் என்ற ஒரு சகோதரரும் ஒவ்வொரு வருட வித்தியாசத்தில் பிறந்தனர். மூன்ருவது குழந்தை பிறந்த சில காலங்களின் பின்னர் கதிர்காம முருகனைத் தரிசிக்கும் பாக்கியம் கைவரப் பெற்று கதிர்காமம் சென்றிருக்கையில் 1909-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் பூரணைத் திதியான கதிர்காம உற்சவ கடைசி நாளன்று தமது 22வது வயதில் அங்கே காலமானுர்.

மூத்த மகன் 16 வயதாக இருக்கும் போதே அவரின் தந்தையாரும் நீண்ட சுகவீனத்தின் பின்னர் தொண்டமானுற்றில் காலமானுர்.

## குழந்தைப் பருவம்:

தாய் தந்தையரை இழந்த இம்மூவரையும் அவர்கள் அன்னையின் சகோதரரான முருகுப்பிள்ளை விஸ்வலிங்கம் தனது மனையாள் தங்கம்மாவின் உதவியுடனும் வளர்த்து வந்தார். இம்மூன்று குழந்தைகளும் தொண்டமானுற்றிலுள்ள அவர்களின் வீட்டுக்கு வந்தபின்னர் திரு. முருகுப்பிள்ளை விஸ்வலிங்கத்திற்கும் அவரின் மனைவியான தங்கம்மாவிற்கும் அருந்தவப் புதல்வி ஒருவர் அவதரித்தார். அவ

ருக்கு கண்மணி என்ற பெயரையும் சூட்டினர். கண்ணின் மணி போன்றவர் என்ற பொருள் பொதிந்த பெயர். கண்மணி 1909-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22-ந் திகதி பிறந்தவராதலால் அவர் ஆரம்ப காலந் தொட்டு ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுடன் பழகும் வாய்ப்பும் இருந்து வந்தது என்பது உண்மையே.

அவர்கள் இருவரும் உடன்பிறந்த அண்ணன் தங்கையாகவே வளர்ந்து வந்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் அழைக்கும் போதெல்லாம் ''அண்ணே'' ''பிள்ளே'' என்றே சொல்லியும் பழகியும் வந்தனர்.

ஆரம்ப காலத்தில் தமது கிராமத்திலுள்ள தமிழ் ஆங்கில பாடசாலைகளில் கல்வி பயின்ற பின்னர் 1915-ம் ஆண்டு சனவரி மாதத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கினார். அவர் படிப்புத் துறையிலும் விளையாட்டுத் துறையிலும் தன்னிகரற்று விளங்கினார். யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி புகட்டி வந்த ஆசிரியரான 'அலன் ஆபிரகாம்' அவர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாக விளங்கினார். திரு. அலன் ஆபிரகாம் அவர்கள் கணிதத்துறைப் பிரதம ஆசிரியராக — திறமை மிக்க ஆசானாக விளங்கினார். வானமண்டல ஆராய்ச்சியாளரின் கணிப்பிற்கு மாறாக 1914-ம் ஆண்டில் தோன்றிய 'ஹேலீஸ்' வால் நட்சத்திரத்தின் தோற்ற நேரத்தையும் காலத்தையும் சரியாகக் கணித்து முற் கூட்டியே கூறியிருந்ததால் அரச வானமண்டல ஆய்வு சபை அங்கத்தவருக்குரிய கௌரவப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

இள வயதினராகிய ஸ்ரீஸ்கந்தராஜா கணிதத்தில் மிகவும் வல்லவராக விளங்கியமையால் மேல் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் போதிக்கப்படும் போதும் பாடசாலை நேரங்களுக்குப்புறம்பான நேரங்களில் மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடத்தப்படும்போதும் ஸ்ரீஸ்கந்தராஜாவும் அவ்வகுப்புகளில் பங்குபற்ற அனுமதியளித்தார் திரு. அலன் ஆபிரகாம் அவர்கள். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் தமது பிற்காலத்தில் தமது குருவான திரு. அலன் ஆபிரகாம் அவர்களின் நேர்மை, பக்தி, கற்பித்தலுக்காக அவர் செய்த தியாகம் போன்றவற்றால் தாம் பெரிதும் கவரப்பட்டுவிட்டதாக அடிக்கடி கூறுவார்.

1920-ம் ஆண்டில் அவர் யாழ்ப்பாணக் கல்லூரியை விட்டு விலகி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சேர்ந்தார். தமது லண்டன் மற்றிக்குலேஷன் சோதனைக்கு ஆயத்தம் செய்வதற்காக 1922-ம் ஆண்டு ஜனவரியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் சேர்ந்து படித்துச் சோதனையும் எடுத்தார். 1922-ம் ஆண்டு அக்டோபரில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிய போது சோதனையில் சித்தியடைந்த 52 பேருள் முதலாவது பிரிவில் சித்தியெய்திய நால்வருள் இவரும் ஒருவராகவிருந்தார். மறுபடியும் இவர் யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்று டெனிஸ், கிரிக்கட் ஆகிய ஆட்டங்களில் சிறந்து விளங்கினார். 1923-ம் ஆண்டு பெப்ரவரியில் நடைபெற்ற கிரிக்கட் ஆட்டத்தில் தமது கல்லூரிக் கோஷ்டியின் கப்டனாக இருந்தார்.

**சர்வகலாசாலைப் படிப்பு:**

1923-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் பட்டப்படிப்பிற்கு அனுமதி பெறுவதற்கான இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதன் பெறுபேறாக அவருக்குத் திறமைப் பரிசிலும் உபகாரச் சம்பள நிதியின் கீழ் கல்வி பயிலும் வாய்ப்பும் கிட்டியது. சர்வகலாசாலையின் விளையாட்டுத் துறையில் ''றக்பி'' ஆட்டத்தில் முதன் முறையாகப் பங்குபற்றி வெற்றி வாகை

சூடியதுடன் ''றக்பி'', ''காற்பந்து'', ''டென்னிஸ்'' ஆகிய விளையாட்டுக்களில் அவரின் திறமைக்கு விருதுகளும் வழங்கப்பட்டன. சர்வகலாசாலையின் காற்பந்தாட்டக் குழுவின் கப்டனுகவிருந்தார். சர்வகலாசாலை மாணவர் யூனியன் கௌரவப் பொதுக் காரியதரிசியாக 1925-ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டார். அக்காலத்தில் மாணவர்களாய் இருக்கும்போது வகிக்கும் அதியுயர்ந்த பதவி இதுவேயாகும். இத்தேர்வில் இவரின் எதிர்தரப்பார் இனத்துவேஷமான பிரச்சாரங்களைச் செய்தும் அமோகமான ஆதரவைப் பெற்றே தெரிவு செய்யப்பட்டார்.

**விளையாட்டுத் துறை:**

இவர் கிரிக்கெட், டெனிஸ் விளையாட்டுக்களில் அபார திறமை பெற்றிருந்தும் ''யாழ்நகர் ஈன்றளித்த ஒரு திறமை வாய்ந்த காற்பந்தாட்ட வீரர்'' என எல்லோராலும் போற்றப்பட்டார். அவர் தனது கல்லூரிப் படிப்புக் காலத்திலே ஒரு சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். மக்கள் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் அபிமானிகளாகவே இருந்து அவர் விளையாடும் நேரங்களில் அங்கு சென்று அவருக்கு உற்சாகமூட்டி மகிழ்வார்கள். அவரின் விளையாட்டுக் காலத்தில் பிறந்த குழந்தைகளுக்குக்கூட அவரின் நாமத்தையே சூட்டும் அளவுக்கு பிரபலமான நிலையில் விளங்கினுர்.

உதைபந்தாட்டம் ஆடுகின்ற போது அவர் வெகு துரிதமாக விளையாடுவது மாத்திரமன்றி பந்தை நேராகக் குறிபார்த்துச் செலுத்துவதுடன் மற்றவரையும் விட அதி வேகமாக தமது இடது அல்லது வலது காலால் பந்தை உதைக்கும் திறமை பெற்றவராக விளங்கினுர். அது மாத்திரமன்றி பந்தை தமது தலையால் தடுத்து மற்றவரினும் கூடுதலான தூரத்திற்குச் செல்லும்படி அடிப்பார்.

யாழ்ப்பாணம் முற்ற வெளியில் ஸ்ரீஸ்கந்தராஜா காற்பந்தாட்டம் ஆடுகிறுர் என்றுல் யாழ் நகரப் பகுதியில் வாடகைக்குப் பிடிக்கும் ரிக்ஷா வண்டிகள் எதையும் காண முடியாது. ஏனெனில் அந்த ரிக்ஷாக் காரர்கள் எல்லோரும் உதைபந்தாட்டம் பார்க்கச் சென்றிருப்பார்கள். பள்ளிக்கூட அதிபர் முதல் மாணவர்கள் வரை யாவரும் முற்ற வெளியில் தான் நிற்பர். 1928-ம் ஆண்டு தொடக்கம் 1937 ஆண்டு வரையும் வட இலங்கை வருடாந்த டெனிஸ் போட்டியில் தனி விளையாட்டு இணை விளையாட்டு ஆகிய இரண்டிலும் அவரே வெற்றி வீரராகத் திகழ்ந்தார்.

**ஆசிரியத் தொழில்:**

அவரின் கலாசாலைப் படிப்பு முடிந்ததும் 1926-ம் ஆண்டு இறுதி வரை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை புரிந்தார். 1927 ஜனவரியில் விஞ்ஞான ஆசிரியராக கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் நியமனம் பெற்ருர்.

**சட்டக் கல்லூரி:**

1928-ம் ஆண்டு ஜுலை 4-ம் திகதி சட்டக் கல்லூரியில் அனுமதி பெற்று 12 மாதங்களுக்குள் ஆரம்ப பரீட்சைகள் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டார். வழகுரைஞர் சோதனையில் முதற் பரீட்சையை 1930-ம் ஆண்டு ஜுலையிலும் 2வது பரீட்சையை 1931-ம் ஆண்டு ஜனவரியிலும் பூர்த்தி செய்து கொண்டார். 1931-ம் ஆண்டு ஜுலையில் நடைபெற்ற வழக்குரைஞர் இறுதிப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தார். ஒவ்வொரு பரீட்சையிலும் அவர் இரண்டாம் இடத்தைப் பெற்றுத் தேறினுர் இறுதிப் பரீட்சையில் ''இன்ஸோல் வென்ஸி'' துறையில் அதி விசேடமாகச் சித்தியெய்தியமைக்கான பரிசிலையும்

பெற்ருர். இச்சோதனையில் தேறிய பின்னர் எவ். ஜே. சோற்ஸ் சேம்பர் ஸிலும் பயின்ருர்.

### சட்டமன்றத் தொடர்பு:

1932-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதி சட்ட மன்றங்களில் வழக் குரைஞர் தொழில் புரிவதற்கான நீதி மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்ருர். இவருடன் அனுமதி பெற்ற மற்றையோர் திருவாளர்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தன, எதிரிவீரா, எஸ். விஸ்வலிங்கம் மேலும் இருவர் ஆவர்.

### சட்டமன்றத் தொழில்:

இவர் 1932 மார்ச் 17 தொடக்கம் 1938 மே 30 வரையும் முதலில் கொழும்பிலும் பின்னர் பருத்தித்துறையிலுமாக வழக்குரைஞர் தொழில் புரிந்தார். இவ்வழக்கில் அவர் வாதி தரப்பைச் செய்த குறுக்கு விசாரணைகள் பொருள் பொதிந்தவையாகவும் விரிவானதாகவும் இருந்தன பிரதிவாதிகள் நிரபராதிகள் என்பதைப் புலப்படுத்தும் முறையில் வழக்கை நடத்திவிட்டு தமது ஆசனத்தில் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் அமர்ந்ததும் மாஜிஸ்திரேட் எதிரிகள் எல்லோரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். இந்நிகழ்ச்சியானது அங்கே வழக்குப் பார்க்க வந்தோரிடையே நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தியதுடன் பருத்தித்துறைக் கோட்டில் சேவை புரியும் மற்றும் வழக்கறிஞர்களும் தம் கட்சி சார்பில் வழக்குரை செய்ய அவரையே அழைக்கலாயினர். அவ்வாறு சிலகாலம் அங்கே சேவை புரியலானர். 1932 ஜூனில் கொழும்பில் தாம் ஏற்றிருந்த வழக்குகளையும் தம் நண்பர்களை நடத்தும்படி விட்டுவிட்டு அவர் பருத்தித்துறைக்குச் சென்ருர். அவர் பருத்தித்துறைக் கோட்டில் பேசிய வழக்குகளில் ஒன்றன்மேல் ஒன்ருக வெற்றியே கிடைக்கத் தொடங்கியது. அத்துடன் வெளியிடங்களிலும் வழக்குகள் பேசி வரலானர். இவர் வழக்குரைஞர் தொழில் புரிந்த ஆறு வருட காலத்தில் குறைந்த 33 நீதிபதிகளுக்கு முன்னலாவது வழக்குரைஞராகக் கடமை புரிந்திருப்பார். எத்தனையோ தடவைகளில் கைகலப்புகளில் ஈடுபட்ட மக்கள் ஓடோடி வந்து தங்கள் பக்க வழக்குரைஞராக ஏற்படுத்துவதும் இதை அறியாத எதிர் தரப்பினரும் ஸ்ரீஸ்கந்தராசா அவர்களையே தம் கட்சி தரப்புக்கு ஏற்படுத்துவதற்காக வந்து அவர் மறு தரப்புக்கு ஏற்பட்டது கண்டு ஏமாற்றத்துடன் சென்ற சந்தர்ப்பங்கள் அநேகம். ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் இவ்வாறு சிறந்த வழக்குரைஞராக எல்லோராலும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் போற்றப்பட்டார்.

நீதிமன்றத்தில் வழக்குரை தொழில் புரிவது பாவம் என்று அவரின் மனையாள் கண்மணி பல்காலும் எடுத்துரைத்து வற்புறுத்தியதன் பேரில் தமது ஆறு வருட வழக்குரைஞர் தொழில் அனுபவத்தின் பின்னர் நீதி பரிபாலன சேவையில் சேர்வதற்கு விண்ணப்பித்தார்.

1938-ம் ஆண்டு மே மாதம் 31-ம் திகதி தண்டகமுவ மேலதிக மாஜிஸ்திரேட்டாக தமது 33வது வயதில் நியமனம் பெற்ருர்.

### திருமணம்:

1926-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி தம்முடன் சிறு பிராயம் தொடக்கம் ஒன்ருகப் பழகி வளர்ந்து வந்தவரான செல்வி கண்மணி விஸ்வலிங்கத்தைத் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணம் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. இத் திருமணத்தில் அவர் குடும்பத்தவரல்லாதவர்களாக ஐவரே கலந்து கொள்ளக்கூடிய அளவிற்கு மிகவும் சாதாரணமாக நடைபெற்றது. இராமநாதன்

கல்லூரி மாணவியாயிருந்த கண்மணி தான் படித்து ஒரு டாக்டராக வர வேண்டுமென்று முன்னர் போட்ட திட்டமும் இத்திருமணத்தால் தடைப்பட்டது. கண்மணியவர்கள் தம் கல்லூரிக் காலத்தில் மதித் திறன் மிக்கவராக மிளிர்ந்தது டன் தமிழிலும் இந்து மதத்திலும் நிறைந்த அறிவுடையவராக விளங்கினர். அவரின் கல்லூரி வாழ்க்கையின் போது இடப்பட்ட இந்த உறுதியான அத்திவாரம்தான் வாழ்நாள் முழுவதும் அவருக்கு உறுதுணையாக விருந்தது. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் தமது ஞாபகக் குறிப்பேட்டில் ''கண்மணி எப்பொழுதும் எனது தைரியத்தின் கோட்டையாக இருந்து வந்துள்ளார். எந்த விதமான சூழ்நிலையிலும் எனக்குப் பக்க பலமாக இருந்து வந்தார். அவர் இத்தகைய தைரியத்துடன் இருந்தமைக்குக் காரணம் அவர் கடவுள்மீது கொண்டிருந்த நீங்காத பற்றுதலும் நம்பிக்கையுமேயாகும். எமது நான்கு குழந்தைகளையும் நன்நெறிப்படுத்தி நல்ல பிள்ளைகளாக்கினர்.'' எனக் குறிப்பிட்டிருந்தார். கண்மணியின் சிறந்த ஞாபக சக்தியே அவர் சிறந்த அறிவுள்ளவராக விளங்கியமைக்குக் காரணமாயிருந்தது.

ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் நீதி தவரு மன்னராகவும் நேர்மை வழியிற் செல்பவராகவும் விளங்கியமைக்குக் காரணம் அவர்கள் பொருள்மீதும் அதிகாரத்தின் மீதும் பற்றுதலின்றி இருந்தமையேயாகும். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களும் அவரின் அன்புப் பாரியாரும் சிறு பராயந் தொட்டு முதுமைக் காலம் வரையும் மரணத் தறுவாயிலுங்கூட இணைபிரியாதவர்களாகவே விளங்கினர்.

## நண்பியல்:

அவர் எவருடனும் உளம் விட்டுப் பழகி நண்பு பூண்டுவிட்டால் அந்நட்புரிமையில் என்றும் உறுதியும் நேர்மையும் விசுவாசமும் கொண்டவராகவே விளங்கி வந்ததுடன் தமது நண்பர்களுக்காகப் பல தியாகங்களும் புரிந்துள்ளார். அவர் யாழ்ப்பாணக் கல்லூரி விடுதி மாணவராகத் தங்கியிருந்த காலத்தில் அவ்விடுதியில் ஒரு வகையான தொற்று நோய் பரவியது. தமது உத்தம நண்பன் ஒருவனுக்கும் அந்நோய் கண்டது. தொற்று நோயென்றும் பாராது அந்நண்பனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செவ்வனே செய்து வந்தார். அந்நண்பனின் குடும்பத்தினர் அங்கு வந்து அந்நோயாளியைத் தம தில்லம் கொண்டு செல்லும் வரையில் விடுதியில் தன் நண்பனுக்கு வேண்டிய உதவிகளைச் ஸ்ரீஸ்கந்தராசா செய்துதவினர். இத்தகைய மனேபாவமுடைய இவருக்கும் அந்த நோய் (நெருப்புக் காய்ச்சல்) பீடித்தது. பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற டாக்டர் கே. ராஜா அவர்களினுல்தான் தமது சிறந்த சிகிச்சை மூலம் இவரைக் குணப்படுத்த முடிந்தது. இவர் சர்வ கலாசாலையில் கற்குங்கால் இவரின் நண்பரொருவர் உத்தரவின்றி யூனியன் விடுதியை விட்டு வெளியே சென்று இரவு நேரத்தில் காலந் தாழ்த்தி வந்தமைக்காக (விடுதி மேற்பார்வையாளராற் தண்டிக்கப்பட்ட போதிலும்) நீதியற்ற முறையில் இப்பிரச்சினை கிளறப்பட்டபோது இது கண்டு சகிக்காதவராகிய ஸ்ரீஸ்கந்தராஜா தன் நண்பனுக்காக இவ்வநீதியை எதிர்த்து தம் உயிரைப் பணயம் வைத்தேனும் போராடச் சித்தங் கொண்டார். அவரின் நண்பர்கள் சிலர் அவருக்குப் பல ஊறுகள் செய்த போதிலும் அவர்கள் மீது கோபமோ பழி வாங்கும் எண்ணமோ சிறிதும் இல்லாதவராய் பதிலாக அவர்களுக்குக் கஷ்டங்கள் நேர்ந்தபோது உறுதுணையாக நின்று தம்மால் இயன்ற வரை வேண்டிய உதவிகளைச் செய்தார்.

## ஒரு நீதிமானுக்கு வேண்டியபண்புகள்

அவரது ஞாபகக் குறிப்பேட்டில் காணக் கிடைத்தவை: ''மக்களிற் பலர்

உணர்ந்து கொள்ளத் தவறுவன எவை யோ அவைதான் மூத்தோர் இளையோர், அரசன், ஆண்டி, அமைச்சன் ஏவலாளன் என்ற பாகுபாடின்றி எவ்வித பயமோ பக்கஞ்சார்தலோ இன்றி தன்னிச்சையான சுயசிந்தனையுடன் நீதி பரிபாலிப்பதாகும். அவனுக்கு அபாரமான அல்லது கம்பீரமான தோற்றம் வேண்டியதில்லை. உறுதியான மனமும், பயமற்ற இதயமும், மனச்சாட்சிக்கும் தெய்வத்துக்கும் அஞ்சி நடக்கும் பண்பும் கடமையுணர்வுமே தேவை. இவ்வுண்மையினை வேறு வார்த்தைகளிற் சொல்வதானால் நான் உயர் நீதிமன்றத்துள் பிரவேசித்தபோது (1962 ஜூன் 25ல்) சட்ட மன்றம் எனக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கையில் சுப்பிரமணிய பாரதியாரின் பாடலிலிருந்து எடுத்தாண்ட

''தெய்வம் மறவார், செய்யுங் கடன் பிழையார்
ஏதுதான் செய்யினும் ஏதுதான் வருந்தினும்
இறுதியில் பெருமையும் இன்பமும் பெறு' வார்'

என்ற பாடலின் வார்த்தைகளிலேயே சொல்லலாம். இப்பாடலின் பொருளை ஆங்கிலத்தில்

"He who forgets not god and fails not in his duty
In whatever he does however much
He may suffer, will in the end
Atair honour and happiness" என்று கூறினேன்'' என்பதாகும்.

## அவரின் தீர்ப்புக்கள்:

அவரின் தீர்ப்புக்கள் தனிப்பண்பு வாய்ந்தவையாகும். அவை சில சந்தர்ப்பங்களில் உயர்நீதி மன்ற அளவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு தள்ளுபடி செய்யப்பட நேரிடினும் பிரிவிக் கவுன்சிலுக்குச் செல்லுங்கால் அவ்வுயர் நீதிமன்றத் தீர்ப்பு தள்ளுபடி செய்யப்பட்டு இவரின் முந்திய தீர்ப்பே சரியானதென ஏற்றுக்கொள்ளப்பட்ட பல சந்தர்ப்பங்களுமுண்டு.

## முதலாவது புரட்சித் சதி வழக்கு:

அவர் தமது வாழ்நாள் முழுவதும் ''நீதி வழங்கப்படுவது மட்டுமின்றி அது நீதியான முறையில் வழங்கப்படுவதாக இருக்க வேண்டும்'' என்னும் கொள்கையால் வழி நடத்தப்பட்டவராவார். முதலாவது புரட்சிச் சதி வழக்கை விசாரிக்கவிருந்த நீதியரசர்களின் நியமனம் பற்றிய சட்ட முரண்பாடு சம்பந்தமான தீர்ப்பை வழங்குகையில் அவரின் இக்கொள்கைப் பிரயோகம் தெற்றெனப் புலப்படுவதாக விருந்தமையைக் காணலாம். அவரின் தீர்ப்புக்கள் சர்வதேசப் புகழ் வாய்ந்தனவாகும்.

## சமய போதனையும் சாதனையும்:

தாம் பெற்ற சமய அறிவினையும் தாம் கண்ட தெய்வ அனுபவங்களையும் மற்றவர்களுக்கும் பயன்படுத்தும் வகையில் அவரும் அவரின் பாரியாரும் (1942ல்) தமது வீட்டிலேயே ஒவ்வொரு ஞாயிற் கிழமைதோறும் தம் பிள்ளைகளுக்கு சமய பாட வகுப்புகள் நடத்தி வந்தனர். 1945-ம் ஆண்டில் அவர் திருகோணமலையில் கடமையாற்றிவந்த காலை அப்பகுதியிலுள்ள பிள்ளைகளுக்குச் சமய அறிவையூட்ட வேண்டுமெனும் குறிக்கோளுடன் பாடசாலையிலும் ஞாயிறு சமய பாட வகுப்புகளை நடாத்தி வந்தனர். தாம் கடமை புரிந்த ஒவ்வொரு பகுதியிலும் இந்துக் கழகங்களும் சங்கங்களும் ஸ்தாபித்து மக்கள் சைவ சமயத்தில் ஊக்கம் கொள்ளச் செய்தனர். கடமை புரிந்த இடங்களில் அவர் கடமையாற்றச் செல்லும்போதும் கடமை முடிந்து திரும்பும் போதும் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்தே வீடு திரும்புவார். ஏனெனில் தமது கடமையைக் குற்ற

மின்றி நிறைவேற்ற தெய்வத்தின் உத வியையே அவர் நாடினுர். அவர் தமது வாழ்நாளில் இரண்டு விடயங்களை முக்கிய கவனத்திற் கொண்டிருந்தார் ஒன்று தமது மனச்சாட்சியின் படியும் நீதியின் படியும் நீதி வழங்குவது. மற்றது பொத்துவிலில் தமது தந்தையார் ஆரம்பித்த பிள்ளையார் கோவிலின் கட்டட வேலையைப் பூர்த்தி செய்தல் அவர் இவ்வுலகை விட்டு நீங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர்தான் அக்கோவிலின் கட்டட வேலைகள் பூர்த்தியாகியிருந்தன. கண்மணி எப்பொழுதும் சூரியனைச் சுற்றும் சந்திரன் போன்று தன் கணவனையே வட்டமிட்டுக் கொண்டிருந்தார். சூரியன் அற்றுவிட்டால் சந்திரனுக்குச் சோபை ஏது? அவர் கணவனை இழந்து இவ்வுலகில் உயிர் வாழ விரும்பவில்லை.

கண்மணியவர்கள் படுக்கைக்குச் செல்வதற்கு முன்னர் குறைந்தது அரை மணித்தியால நேரத்திற்காவது தம் பிள்ளைகளின் அருகிற் சென்று வருடக் கணக்காகத் தாம் அவர்களுக்குச் சொல்லி வந்த அறிவுரைகளின் தொகுப்பைச் சொல்லி ஞாபகப் படுத்துவார்.

## ஆலயப் பிரவேச இயக்கம்:

அவர் தமது ஆரம்ப வாழ்க்கை தொடக்கம் பிற்கால வாழ்க்கை வரையும் தாழ்ந்த சாதி உயர்ந்த சாதி என்ற பாகுபாடு எதுவுமின்றி வாழ்ந்து வந்தார். சங்கைக்குரிய ஜோன் பிக்னெல் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராயிருந்த காலத்தில் எத்தனையோ தாழ்ந்தகுல மாணவர்களைத் தமது கல்லூரியில் சேர்த்தார். அவர்கள் கல்லூரி விடுதிகளில் தங்குவதற்கும் இடமளித்தார். இக்காரணத்தால் உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக் கொள்ளும் பல மாணவர்கள் அக்கல்லூரியை விட்டு விலகி வேறு கலாசாலைகளில் சேர்ந்தனர். ஆனுல் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் அங்கேயே தொடர்ந்து கல்வி பயிலலானுர். திரு. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் 1956-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆலயப் பிரவேச இயக்கத்தை தொடக்கி வைத்தார். தாழ்த்தப்பட்ட மக்களும் சென்று வழிபடுவதற்கு கோவில்களைத் திறந்து விடும்படி முக்கிய கோவில்களின் அறக்காவலர்களின் சம்மதத்தையும் பெற்றுக்கொண்டார். அறக்காவலர் சிலரை வற்புறுத்துவதற்கு காலஞ்சென்ற திரு. சீ. குமாரசுவாமியின் உதவியையும் பெற்ருர்.

1956-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் திகதி திரு. பொன் ஸ்ரீஸ்கந்தராசா தாழ்த்தப்பட்ட தமிழர் சிலரை முதல் நல்லூர் கந்தசுவாமி கோவிலுள்ளும் அதன் பின் பெருமாள் கோவில், வண்ணர்பண்ணை சிவன் கோவிலுக்கும் அழைத்துச் சென்று வணங்கினுர். இவரின் விடாமுயற்சியால் பன்னிரு கோவில்கள் அவ்வருடம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத்திறந்துவைக்கப்பட்டன.

''ஆலயப் பிரவேச இயக்கத்தினுல், கோவில் அதிகாரிகள் தோல்வியடையவுமில்லை; தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வெற்றியடையவுமில்லை. மனச்சாட்சியின்படி மக்களின் மனம் மாற்றமடைந்தால் தான் இது நிறைவேறும்'' என்று அவர் எப்பொழுதும் சொல்லிக் கொள்ளுவார்.

இவரின் விடா முயற்சியை இந்துக்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் இன்னும் பலவிடங்களிலும் பாராட்டினர். 1964-ம் ஆண்டு வைகாசி மாதம், மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம் இவருக்கு ''சைவசிகாமணி' என்ற பட்டமளித்து இவர் ''சைவத்திற்கும் தமிழ் மொழிக்கும்' செய்த சேவையைப் பாராட்டினர்.

**ஆ. தெ. மூர்த்தி**
கொழும்பு.

# திருமதி. கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

**தோற்றம்:**

*1909 செப்டம்பர் 22-ம் நாள்.*

**பெற்ரேர்:**

*தொண்டமாஞற்றின் புகழ்பெற்ற செல்லச் சந்நிதியில் முருகுப்பிள்ளை விசுவலிங்கத்திற்கும் அவர் மனையாள் தங்கம்மாவுக்கும் திருமகளாக அவதரித்தார்.*

*தொண்டமாஞற்று விதானையரான முருகுப்பிள்ளை என்பவர் இவரின் தந்தை வழிப்பாட்டனுவர்.*

*வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தமிழ் வித்துவானுன பொன்னையா பிள்ளையே இவரின் தாய்வழிப் பாட்டனுவர்.*

*பல்லாண்டுகளாக இவர் தனது பெற்ரேர்களுக்கு ஒரே மகளாக இருந்தார். இவரின் சகோதரன் இருபது ஆண்டுகளின் பின்புதான் பிறந்தார். இவரிலும் முதியவர்களான மைத்துனர்கள் — ஸ்ரீஸ்கந்தராசா, பாலசுந்தரம், மைத்துனி — இராணி ஆகியோருடனேயே இவரை இவரின் பெற்ரேர்கள் வளர்த்து வந்தார்கள்.*

**கல்வி:**

*இவர் முதலில் வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிசன் தமிழ்ப் பாடசாலையிலும், அதைத் தொடர்ந்து உடுப்பிட்டி மிசன் ஆங்கிலக் கலவன் பாடசாலையிலும் கல்வி பயின்று வந்தார். இங்கு இவர் ஒன்பது கிறீத்துவப் பெண்களுடன் ஒரேயொரு இந்துப் பெண்ணுக இருந்தார். தந்தை வழி மாமியாகவும் பின்னெருகால் மணமுடித்த வகையில் இவரின் மாமியாகவும் இருந்த காலஞ்சென்ற கற்பகம் என்பவரும் முன்னெருகால் இவ்வுடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ஆங்கிலக் கலவன் பாடசாலையில் ஒரு மாணவியாக இருந்தவரே. கற்பகம் பின்பு உடுவில் பெண்கள் கல்லூரியில் கல்வி பயின்ருர். அந்நாட்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த இராமநாதன் பெண்கள் கல்லூரியே இந்துக் குடும்பங்களிற் கலாச்சாரச் சூழலுக்கமைவாய் உள்ளது என்ற முடிவுக்கு வந்த விசுவலிங்கம் அவர்கள் கண்மணியையும் இராணியையும் அக்கல்லூரிக்கனுப்பினுர். அங்கோ கண்மணி பல துறைகளில் பிரகாசித்தார். இராமநாதன் கல்லூரியில் பணியாற்றியவரும் ஓர் உண்மை ஆசிரியனுக்கேற்ற இலக்கணங்கள் வாய்க்கப் பெற்றவருமாய் இருந்த சோமசுந்தரம் வாத்தியாருக்கு கண்மணி மிகவும் பிடித்தமான மாணவியாக இருந்தார். அடிக்கடி அக்கல்லூரியில் அவருக்குச் சங்கீதத்திலும் தமிழிலும் பற்பல வெகுமதிகள் கிடைத்தன. வயலினே இவரின் மிகவும் விருப்பமான கருவியாக இருந்தது. இக்கருவியைத் தொடர்ச்சியாக இசைத்துக்துக் கொண்டிருந்த இவர் தனது பேரப்பிள்ளைகளுக்கும் இசையுலகத்திற்கு வழிகாட்டும் நோக்கத்துடன் கடந்த வருடங்களிற் கூட இசைத்துக் கொண்டிருந்தார்.*

*இராமநாதன் கல்லூரியினின்று விலகுவதன் மூலம் 1926இல் ஸ்ரீஸ்கந்தராசாவைக் கைப்பிடித்து மணந்தார். அம்மணவினையோடு தான் இடாக்குத்தராக வரவேண்டுமென்ற குறிக்கோளையும் கைவிட்டார். எனினும் இவர் தனக்கு*

விருப்பமான இந்து சமய சம்பந்தமான நூல்களையும் தமிழ் இலக்கியங்களையும் படிப்பதில் மிகவும் முயற்சியெடுத்தார். இவரின் தாய் வழிப்பாட்டனை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொன்னையாபிள்ளை தனக்குப் பின் விட்டுச் சென்ற பெருமளவு நூல்கள் மூலம் அம்முயற்சி கைகூடுவது சாத்தியமாக இருந்தது. 1926ல் இவர் மணம் புரிந்து கொண்டாலும், மூத்த மகள் 1933ல்தான் பிறந்தாள். அவர் பல வருடங்களாகத் தமிழ்ச் செல்வங்களை எவ்வித தடையுமின்றிப் படித்தறிவதற்கு இவ்விடைக்காலம் உறுதுணையாக இருந்தது. அவர் இவைகளைப் படித்ததோடு தனக்கு முக்கியமானதெனத் தோற்றும் செய்யுட்களை மனனஞ் செய்வார். தனது கடைசி நாட்களிற்கூட அவற்றை ஞாபகமாக வைத்திருந்தார். இறப்பதற்கு ஒரு கிழமைக்கு முன்புகூட நீண்ட கார்ப் பயணம் ஒன்றின்போது தனது துணைவனுக்கும் பிள்ளைகளுக்கும் நளவெண்பாவிலிருந்து சில அடிகளைச் சொல்லி விளங்கப் படுத்தினார். தமயந்தியிடமிருந்து தான் பிரிவதையிட்டு நளன் வருந்துவதாயும், நளனிடமிருந்து தான் பிரிவதையிட்டு தமயந்தி வருநதுவதாயும் அவ்வடிகள் அமைந்திருந்தன. இது பின்னுக்கு வரப் போகும் நிகழ்ச்சியை முன்கூட்டியே பிரதிபலித்ததோ? என்னவோ?

இவர் தனது வாழ்வைச் சென்ற காலங்களில் வாழ்ந்த பெரும் பெண் மணிகளான — மங்கையர்க்கரசி, சாவித்திரி, சீதை, தமயந்தி போன்றோரின் வாழ்வுக்கு உதாரணமாக அமைக்க முயற்சி செய்தார். தனது பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுக்கும் இப்படியான நல்லெண்ணத்தைப் புகுத்த முயற்சி செய்து வந்தார்.

தனது கணவனின் எல்லா முயற்சிகளுக்கும் முழு மனதுடன் எப்பொழுதும் தனது ஒத்தாசையை நல்கி வந்தார். கணவன் இளைப்பாறும் காலம் வரையும் இவரே அவரின் பிரத்தியேக செயலாளராகப் பணி புரிந்தார். இவ்வேலை பெரும்பாலும் கடிதத் தொடர்புகளைக் கொண்டதுமன்றி அவைகளைத் தட்டச்சில் பொறிக்கும்படியும் இருந்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன் ''ஆத்றிற்றிஸ்'' என்ற ஒருவித வாதத்தினல் இவரின் கைவிரல்கள் பாதிக்கப் படும்வரை அவர் இத்தொழிலைத் தொடர்ந்து செய்து வந்தார். ''ஒருவர் இன்னொருவருக்குப் பாரமாகவோ தொல்லை கொடுப்பவராகவோ இருத்தலாகாது. ஒவ்வொரு பிரச்சினையையும் அவரவரே எதிர் நோக்க வேண்டும்'' என்பதையே அவர் இலட்சியமாகக் கொண்டிருந்தார். 1953இல் மாவட்ட நீதிபதியாக இவர் கணவனை யாழ் நகருக்கு மாற்றியதும், படிப்புக்காகக் கொழும்பில் தங்கியிருந்த தனது பிள்ளைகளைப் பள்ளிக்கழைத்துச்செல்லும் பொருட்டும் மீட்டுப் பள்ளியிலிருந்து அழைத்து வரும்பொருட்டும் காரோட்டப் பழகியதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். தனதும் மற்றும் குடும்பத்தினர்களதும் உடுப்புக்களுக்கான தையல் வேலைகளை எப்போதும் இவர் தானுகவே செய்து வந்தார். இவர் தச்சு ஆயுதங்களைக் கூட உபயோகித்ததுண்டு. இரத்மலானையில் உள்ள தங்களது வீடுகளை அமைக்கும்போது இவர் தானுகவே மேற்பார்வை செய்தார்.

நீதிமுறைச் சேவையில் முதல் நியமனமாக தண்டகமூவாவுக்கு நீதவானுக நியமிக்கப்பட்டார். அப்பொழுது கண்மணி தனது மூன்ருவது குழந்தையை (மூத்த மகன்) எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் தனது கடமையை மேற்கொண்ட பின்பே அக்குழந்தை பிறந்தது. அந் நாட்களில் தண்டகமூவா மலேரியாப் பட்டணமாகவும், பாம்புகள் மலிந்தும் இருந்ததினுல் தாயும் பிள்ளைகளும் யாழ்ப்பாணத்திலேயே தங்கினர். 1940 இல் கணவனை நீர்கொழும்புக்கு மாற்றியதும் இவர்களும் அங்கு போய்ச்

சேர்ந்தார்கள். இந்நாட்களிலிருந்து கணவன் மனைவி இருவரும் தாங்கள் வசிக்கும் ஒவ்வொரு பட்டணத்திலும் நிகழும் இந்து சமய சம்பந்தமான நிகழ்ச்சிகளில் தீவிர ஈடுபாடு கொண்டனர். இவருடைய கணவன் தனது நினைவுக் குறிப்புகளில் ''கண்மணி எப்பொழுதும் தான் தைரியத்தின் கோட்டை என்பதை நிரூபித்துள்ளார். கடவுள் நம்பிக்கையும், எவ்வித சூழ்நிலையிலும் அவர் மேற்கொண்ட பொறுமைத் தன்மையுமே அவரது தைரியத்தின் இரகசியமாகும். பிள்ளைகள் நால்வரினதும் தொழில்களையும் ஒழுக்கங்களையும் அவரே சரிப்படுத்தினர்'' என எழுதியுள்ளார்.

இவர்களது மூத்த மகளுக்கு ஒன்பது வயதான காலந் தொட்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் தனது துணைவனையும் பிள்ளைகளையும் அழைத்து பெரிய புராணத்திலிருந்து நாளுக்கொரு கதையாகச் சொல்லிக் கொடுத்து வந்தார். இவர்கள் இருவரும் 1945இல் மாத்தறையிலும், 1945 கடைக்கூற்றில் திருகோணமலையிலும், 1947இல் மட்டக்களப்பிலும் மட்டக்களப்புக்கு அணித்தாயுள்ள பட்டணங்களிலும் ஞாயிற்றுக்கிழமை வகுப்புகளையும் இந்து சபைகளையும் ஆரம்பித்தனர்.

1947இல் இவரது கணவன் பிரதான நீதிவானுகக் கொழும்புக்கு மாற்றலாகியதும் தமது சமய சம்பந்தமான கருமங்களைக் கொழும்பிலும், அதன் நகர்ப் புறங்களான வத்தளை போன்ற இடங்களிலும் தொடர்ந்தனர். சார் கந்தையா வைத்தியநாதனுடன் இந்துக் காங்கிரசுக்கு அத்திவாரமிட்ட உறுப்பினர்களாய் இவர்கள் இருந்தார்கள். இந்தக் காங்கிரசு ''சைவ'' அல்லது ''இந்து'' காங்கிரசு எனப் பெயரிடப்பட வேண்டுமா? என எழுந்த கிளர்ச்சியில் இந்து சமயத்தின் எல்லாக் கிளைகளும் திருப்தியடைதற் பொருட்டு இப்பொழுது வழக்கிலிருந்த ''இந்து'' என்ற பதத்தையே இவர்கள் விரும்பி வரவேற்றனர்.

விருது நகரில் 1954இல் சைவ சித்தாந்த மகா சமாஜம் அதன் 49வது மகாநாட்டில் உரையாற்றும்படி கண்மணி ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு அழைப்பொன்றை விடுத்தது. இவ்வழைப்பை யேற்று, மகாநாட்டில் பங்குபற்றி ''ஈழநாட்டின் சைவ ஆலயங்கள்'' என்னும் பொருள் பற்றி அரிய உரையொன்றும் நிகழ்த்தினுர். இவரின் பேச்சு மக்களைப் பெரிதுங் கவருவதாய் இருந்தது. அதன் பின் இவர் சென்னையிலுள்ள இந்து மாமன்றங்களில் உரை நிகழ்த்தும்படி சென்னை சச்சிதானந்தம்பிள்ளை அவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டார்.

இவர்கள் இவ்வரிய சந்தர்ப்பத்தை யாத்திரை செய்வதற்கும் பயன்படுத்திக் கொண்டனர். இவர்கள் யாத்திரை செய்த பல தலங்களுள், பழநி, திருவண்ணுமலை, திருவானைக்கா, திருக்கழுக்குன்றம், திருச்செந்தூர், திருச்சிராப்பள்ளி, குற்ருலம், மதுரை சொக்கநாதர், மதுரை மீனுட்சி போன்றவை முக்கியமானவையாகும்.

1951இல் தமிழ்க் கலாச்சாரச் சங்கமொன்றை நிறுவுதற் பொருட்டு, தனிநாயக அடிகளார் இவரையும் இவரது கணவரையும் அணுகி அவர்களது உதவியை வேண்டி நின்ருர். அதிலிருந்து இவர்கள் இருவரும் இச்சங்கத்தின் மிகவும் தீவிர ஆரம்ப உறுப்பினர் ஆனுர்கள். இதன் ஆரம்பக் கூட்டம் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் நிகழ்ந்தது. 1966இல் கோலாலம்பூரில் மிகவும் கோலாகலத்துடன் நடந்தேறிய அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்கும் இவர்கள் சமுகமளித்திருந்தனர். மகாநாடு முடிந்த பின் மலேசியா அடங்கலிலும் மற்றும் சிங்கப்பூரிலுமுள்ள பல சங்கங்கள் இவரைச் சொற்பெருக்காற்றும்படி அழைத்தன.

இவரும் அவற்றை அன்புடன் ஏற்று உரைகளையும் ஆற்றினர். தாய்நாடு திரும்புமுன் இவர்கள்' பாங்கொக்கை' கையுங் கண்டு களித்தனர்.

இவர்கள் இருவரும் முருகன் மேல் அளவிலாப் பக்தி கொண்டவர்கள். ஒவ்வோராண்டும் ஆடி ஆவணியில் வரும் திருவிழாவுக்கும் மற்றும் போகக் கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் செல்லச் சந்நிதிக்கு யாத்திரை செய்ய இவர்கள் தவறுவதில்லை. 1934 தொடக்கம் இவர் கந்த சஷ்டி விரதத்தை அனுட்டித்து வந்ததுடன் கோவிலில் அடியார்களுக்குக் கந்தபுராணத்தை வாசித்துப் பயனுஞ் சொல்லி வந்தார். இவர்கள் கதிர்காமத்திற்கு யாத்திரை செய்வது வழக்கம். திசமாறகமத்திலிருந்து கதிர்காமத்திற்குக் கால்நடையாகச் செல்லவேண்டியிருந்த காலங்களில் கூட இவர்கள் யாத்திரை செய்தனர்.

### கதிர்காமக் கந்தனின் தரிசனம்:

1941இல், திருவிழாக் காலத்தில் இவர், கணவனுடனும் தாயாருடனும் கதிர்காமத்திற்குச் சென்றிருந்தார். பகற் பொழுதில் இவர்கள் கால்நடையாகச் செல்லக்கதிர்காமத்திற்கு சென்று திரும்பியிருந்ததால் அன்றிரவு கால்கள் நோக்கண்டிருந்தன. புண்பட்டிருந்தன. அதனால் அவர்கள் தாங்கள் தங்கியிருந்த அப்போதிக்கரியின் வீட்டில் படுத்துறங்கினர். காலை 4 மணிக்கு தீக்குளிப்பு விழா நிகழவிருக்கிறது என மறு அடியார்கள் சொல்லக் கேட்டதாலும் இவர்களும் அதைக் கண்டு களிப்பதற்கு தங்கள் களையினால் நேரத்துடன் விழித்தெழ இயலாது என்று எண்ணிக்கொண்டு உறக்கங் கொண்டனர். ஆனால் கந்தனின் அருளால் இருவரும் 3 மணிக்கே துயிலெழுந்து தீக்குளிப்பு விழாவுக்குச் சென்றனர். மாபெருந் தணல்கள் தகதகவெனப் பிரகாசித்துக்கொண்டிருந்த தீக்குளிக்கும் இடத்தின் எல்லாப் பக்கங்களிலும் ஏற்கனவே கூட்டம் நிறைந்து வளிந்து கொண்டிருந்தது. அப்பொழுது திடீரெனக் கோயில் திசையிலிருந்து இராமகிருஷ்ணர் போல் உடையணிந்த மனிதன் ஒருவன் வந்து, தகதகவென ஒளிவீசிக்கொண்டிருந்த தணல்களுக்கு மேலாக நடந்து, ஆற்றை நோக்கிச் சென்று கொண்டிருந்ததை ஸ்ரீஸ்கந்த ராஜா அவர்கள் கண்டார்கள். ஆனால் கண்மணி அம்மனிதனை ஒரு புத்த பிக்குவின் உருவிற்றான் கண்டார். பலர் அவனை ஓர் இளைஞனாகக் கண்டனர். கூட்டத்திலிருந்த மற்றவர்கள் அம் மாயத் தோற்றத்தை அடியோடு காணவில்லை. காலில் ஏதாவது காயம் ஏற்பட்டுள்ளதா என்பதை அறியும்பொருட்டு கடமை புரிந்து கொண்டிருந்த ஊர்ப்பாதுகாவலர்கள் வழக்கப்படி அம் மனிதனை நிறுத்த முயன்றனர். ஆனால் நிறுத்துவதற்கு அம்மனிதனைக் காணவில்லை. அவன் காற்றுடன் காற்றாகி விட்டான். இவ்வற்புதத்திற்திற்குப் பின்பே தீக்குளிப்போர் முதலில் கங்கையில் நீராடிய பின் தீக்குளிப்பதும் அதன் பின் கோவிலை நோக்கிச் செல்வதும் நிகழ்கிறது. தனது அடியார்களுக்குத் தரிசனங் கொடுத்தற் பொருட்டுக் கந்தவேளே அப்படி வந்தான்.

1945இல் இவர்கள் இருவருந் தங்களது காரில் பிறவுண் மலை உச்சி வீடொன்றில் வசித்து வந்த மாத்தறை உதவி அரசாங்க அதிபரையும் அவரது இல்லத்தரசியையும் கண்டுவரச் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது ஏதோ சில காரணங்களால் மோட்டாரோட்டி காரைக் கட்டுப்படுத்த முடியாது திணறினான். காரோஉயர்ந்து செங்குத்தாக இருந்த மலையிலிருந்து மெல்ல மெல்லச் சறுக்கிக் கொண்டு பின்னோக்கிச் செல்லத் தொடங்கியது. உடனே கண்மணி ''கதிரவேல்'', ''கதிரவேல்'' எனக் கூவினர். அவரின் கணவன் முருகனை அழைத்தார். அப்பொழுது தெய்வச் செயலாக ஓரத்திலிருந்த தென்னைமரக்

கொட்டொன்று தானுகவே மட்காட்டிற் சிக்கிக் கொண்டது. அதனுல் அவர்களின் கார் அநிச்சயமான ஆனுல் நிலேயாக நின்றது. அவர்களின் கூக்குரலேக் கேட்டு அங்கு வந்து சேர்ந்த மக்கள் அவர்களேக் காப்பாற்றினுர்கள்.

1958இன் இனக் கலவரத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக அதற்குச் சில மாதங்களின் பின் அவரைப் பீடித்திருந்த ''ஆற்றிற்றீஸ்'' என்ற ஒரு வித வாத நோய் அதிகரிக்கத் தொடங்கியது. நடக்க முடியாத அளவிற்கு அது அதிகரித்தது. எனினும் அவர் இந் நோய்க்கு இடங் கொடுக்கவில்லே. வீட்டை நடாத்துவதற்கான உதவிகளேத் தன்னுல் இயலக்கூடியளவு தானே செய்து வந்தார். கணவனுக்கும் பிள்ளேகளுக்கும் விருப்பமான ஆகாரங்களேத் தன் கைப்படவே சமைப்பது, பேரப்பிள்ளேகளேக் கண்காணிப்பது போன்றவற்றை இவரே செய்து வந்தார். பேரப்பிள்ளேகளின் எல்லா வருத்தங்களுக்கும் சிறந்த கைதேர்ந்த வைத்தியராகவும் இருந்தார். அழைக்கப்படும் எல்லா விழாக்களிலும் சடங்குகளிலும் பங்கு பற்றினுர். இவர்கள் இருவரும் இறப்பதற்கு ஒரு கிழமைக்கு முன்பு கூட கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் நடத்திய நாவலர் நினேவுதின விழாவில் பிரசன்னமாய் இருந்ததுடன் கண்மணி அவர்கள் அரிய தொரு உரையும் ஆற்றினுர்கள். சமய சம்பந்தமான ஏடுகளுக்கும் புதினத் தாள்களுக்கும் கட்டுரை வழங்கும்படி இவருக்கு அடிக்கடி அழைப்புக்கள் வருவது சகசம்.

இவர்களின் முழுக் குடும்பத்தினராலும் அனுட்டிக்கப்பட்டு வந்த விரதங்களான பிரதோஷத் திதியில் கண்மணி அவர்களும் சஷ்டித் திதியில் ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் மண்ணுலகை விட்டு விண்ணுலகை எய்தியதே ஒரு நல்ல அறிகுறியாகும்.

டாக்டர் **எஸ். சிவயோகம்**
கொழும்பு

* * *

# May Their Souls Rest In Peace

The late Mr. & Mrs. P. Sri Skanda Rajah have often participated in the celebrations of our Mission. They were very cultured and dedicated their services in ample measure to the Lord. Mr. Sri Skanda Rajah was upright and steady in his profession. He was also very bold in his decisions. He treated all equally and led an exemplary life according to the tenets of Hinduism. The tributes that have been paid by many eminent personalities furnish ample proof of the invaluable service rendered by the devoted couple to the Hindus and the country at large. The country has already expressed its great sorrow at the loss of such devoted souls at this juncture when we need men and women of such calibre. May their souls rest in peace.

**Swami Prematmananda,**
*Vice-President,*
Ramakrishna Mission (Ceylon Branch)

# A Colleague Speaks

*by* **M. S. Sansoni,**
*Retired Chief Justice*

The late Mr. P. Sri Skandarajah and I first met when we were Law Students over 40 years ago. We were members of the Ceylon Judicial Service for many years and eventually we were fellow judges of the Supreme Court.

I thus came to know him well and we remained friends until his death. We were both interested in the study of the Law and the administration of justice. On same aspects of these matters we held different views but this did not affect our personal relations with each other.

He was a man of independent character, considerable ability, and strong views to which he gave expression in no uncertain terms. He tolerated nobody who tried to interfere with his judicial powers. He was anxious to see justice done efficiently and speedily, so that he was impatient when he came across instances of slackness or avoidable delay in the handling of cases in Court. He cared not what others may have thought of his actions and judgments for he regarded himself as answerable only to God and his conscience.

He struck me as being a happy man, ready to face disappointments cheerfully. As a deeply religious person he undoubtedly prayed constantly for wisdom and understanding and a right judgment.

It is sad to reflect that he who worked so hard and conscientiously during his judicial career had such a short time which he to enjoy his well-earned retirement.

# SRI SKANDA RAJAH - THE JUDGE

*by* **V. Sivasupramaniam,**
*Supreme Court Judge.*

It is with much pleasure that I accede to the request of the Secretary of the Kompaniththeru Saiva Munnetta Sangam to contribute to this publication a brief article on some aspect of the life of the late Mr. P. Sri Skanda Rajah, whose sudden death has been widely mourned.

The first picture of the late Mr. Sri Skanda Rajah that comes to one's mind is that of Sri Skanda Rajah, the Judge. That was, perhaps, the role in which he found the greatest personal satisfaction. For well nigh one half of the period of his life's span, he sat in judgment between man and man in various capacities — as a Magistrate, as a District Judge, as a Commissioner of Assize and finally as a Judge of the Supreme Court. Throughout that period, he brought to bear on the performance of his duties the qualities of incorruptible impartiality, unflinching courage and sterling independence. He placed much reliance on Divine Guidance and administered justice strictly and unswervingly in terms of his judicial oath — without fear or favour, affection or ill-will. He treated alike every party who appeared before him, whether such party was the State or the humblest citizen. In respect of counsel too who appeared before him, he made no distinction between junior and senior. There were some occasions in the course of his career when his refusal to accord to certain senior lawyers privileges to which they had become accustomed but to which they were not legitimately entitled resulted in his incurring the wrath of those seniors but he refused to be coerced into varying his orders. It was characteristic of him that once he was satisfied with the correctness of a course of action decided upon by him he would not yield to any pressure from any quarter to change it.

He had a sympathetic understanding of the hardships and difficulties of litigants and did everything in his power to alleviate them. In particular he was a firm believer in the dictum "Justice delayed is Justice denied" and he strove hard in every court over which he presided to ensure the prompt dispensation of justice.

In his life he endeavoured to guide himself by the admonition given to Arjuna by Shri Krishna in the Bhagavad Gita:

**"Find full reward**
**Of doing right in right. Let right deeds be**
**Thy motive, not the fruit which comes from them."**

The physical and moral courage which he showed on various occasions undoubtedly stemmed from that fact.

Tiru Valluvar in his immortal Kural, says

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப்படும்

The just and the unjust are known by their posterity.

By that test, the highly talented and distinguished children whom he has left behind are a sure index that the late Mr. Sri Skanda Rajah was a just and virtuous man.

# A GREAT LOSS TO ALL OF US

*by* **R. Sabanayagam,**
*President.*
Kataragama Pilgrims' Thondar Society, Colombo.

Mr. P. Sriskandarajah's death has been a great loss to all of us. I had known him many years, in fact from the days he was a law student. But it was in recent years, after he retired from service that I really got to know him. Sris lived up to the ideals of Hinduism. He was of a genial disposition, affable manners and very sincere friend. He was always available for any work connected with religion. He was a Patron of the Vivekananda Society, a vice president of the Tiruketiswaram Temple restoration society and two years ago on his retirement took over duties as President of the Congress of Hindu Religious Societies.

Failing health latterly did not permit him to be of as much service as he wished, but when duty called, he was there. At the last Annual Meeting of the Congress of Hindu Societies held at Batticaloa, Sriskandarajah was quite ill, but insisted that the meeting be held and also presided its deliberations. His service to the Hindu societies by active co-operation in their activities, timely advice and support has been a shining example to others. He was in the vanguard of the temple entry movement and was a man who was never afraid of expressing his opinion.

His friends will always remember him for his warmth of his personality and his never failing smile of welcome.

# IT IS NOT A CRIME TO BE A TAMIL

*by* **Sir Oliver Goonetilleke,**
*The Former Governor General of Ceylon.*

These are occasions on which if one is all too brief, it should not be interpreted by anybody that one is not conscious of the occasion or the importance of the personage whom we remember today. My mind goes back to a period when those who advised me had genuine doubts whether the impulsive MR. SRI SKANDA RAJAH should be stepped on the ladder to the Supreme Court bench. These were anxieties openly expressed. But, I as representative of the Queen had no doubt that in this country to be a good Tamil did not mean that one ceased to be a good son of Ceylon. To be a good Hindu did not mean that one ceased good to be a son of Ceylon. Mr. Sri Skanda Rajah was a product of all that background. He proved to the world and Ceylon that he was a fair and fearless and upright judge. We are on the eve of the 21st Anniversary of Independence. I like to remind you that Ceylon did not win this freedom by masses of our people going to jail, by our leaders being incarcerated for long periods in jail. **We got freedom across the conference table because we were able to prove that our Judiciary was the best in the Empire at that time.** We proved that our administration could compare with that of other parts of the Empire, **and men like SRI SKANDA RAJAH contributed to this claim.** I am not so close to Ceylon now. Occasionally I read and hear gossip and events that fill me with horror and anxiety. I ask all of you in this Hall and others who may be listening to me that as a memory to MR. SRI SKANDA RAJAH that every person in this Island today make a resolution **that they will never allow communal intolerance to disrupt our claim** to being a multireligious, multiracial community. We are an example in all Asia. We must see to it that it is no crime in this land to differ in politics, that it is no crime in this country to differ in religion, **that it is no crime in this land to be a true Tamil,** a true Muslim, a true Sinhalese. I consider it a great honour to be associated in this meeting to pay tribute to a great man — MR. SRI SKANDA RAJAH.

# Independent And Conscientious Judge

*by* **C. Ranganathan Q.C.**

I am thankful to the Kompaniththeru Saiva Munnetta Sangam for giving me this opportunity to pay my humble tribute to The Late Mr. P. Sri Skanda Rajah retired Puisne Justice.

My first appearance before him was when I appeared in a land case in the Court of Requests at Gampaha. The point involved was one of great difficulty and was ultimately decided by a Divisional Bench of three Judges. Although I was Junior at that time, he was extremely courteous and considerate and helped to elucidate the various legal questions under consideration. When I met him several years later, after his appointment to the Supreme Court, I was surprised to find that he remembered this case and the point that was argued before him.

I had the pleasure of appearing before him in several appeal cases in the Supreme Court. It has been truly said of him that he was a fearless, independent and conscientious Judge; the paramount consideration that weighed with him was the interest of the parties before him and of justice. I respectfully endorse this well deserved tribute.

He will ever be remembered not only as an outstanding Judge but also as a great Hindu Leader. He was a devout and practising Hindu. He took a keen interest in several Hindu Societies and Movements and in particular, the All-Ceylon Hindu Congress which he ably guided as its President. His work and his contribution towards the eradication of social disabilities based on caste are well known. In his religious and social work, he was ably assisted by his devoted wife who survived him only by a few days.

May their souls rest in bliss at the Feet of Lord Siva is my fervent prayer.

# The Late Mr. Justice P. Sri Skanda Rajah

*by* **T. Sri Ramanathan,**
*President.*
Incorporated Law Society of Ceylon.

In the recent past so much has been said of the late revered Mr. P. Sri Skanda Rajah that I wondered what I should say of him in this brief note of mine. Mr. Sri Skanda Rajah's versatility was based on the underlying guiding purpose — enthusiasm for all liberal causes. "Siris" as he is popularly known to those who have been associated with him had a flair for giving and receiving hospitality which had won him many friends in diverse walks of life. He had a talent for getting on with men and women at all levels of society which helped him considerably in making him into a judge of great eminence who put into practice judicial independence, and, above all, who believed in fearlessness.

In conversations after his retirement he enjoyed attacking with zestful wit whatever he felt was not keeping up to accepted traditions and notions. Nobody had the capacity to move more adroitly than "Siris" among politicians, diplomatists and professional men — many of them at loggerheads with one another in many problems. Nobody had a more sensitive ear for the murmurs and undertones of radicalism. On many occasions I had the pleasure of having conversations with him which indicated an insight into his capacity for magnanimity and compromise.

Towards the end of his life "Siris" mind turned increasingly towards personal questions of faith and philosophy and rested in the last resort in the spirit of Hinduism. There is one underlying factor in his life which must be remembered—a conscientiousness with which he discharged any duty allotted to him.

# என்றும் மறவா நன்றி

சிவநெறிக்கும் — செந்தமிழுக்கும், கால மெல்லாந் தொண்டாற்றி — இறைவனடி சேர்ந்த சைவப் பெரியார், சைவ சிகாமணி, **பொன். ஸ்ரீஸ்கந்தராஜா** அவர்களையும்— அன்னாரது அன்பு வாழ்க்கைத் துணைவி **திருமதி. கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா** அவர்களையும் என்றும் மறவா எம் மனத்திரையில் போற்றும் நோக்குடன் வெளியிட்ட இந் **''நினைவு மலருக்கு''** செய்திகள் — குறிப்புகள் வழங்கி பல்லாற்ருனும் பணியாற்றிய பெரியோர்க்கும், இந்நினைவு மலரை, குறுகியகால அவகாசத்துள் அச்சு வாகனம் ஏற்றித்தந்துதவிய **திரு பொ. அழகேசன்** அவர்கட்கும், வரையறுக்கப்பட்ட கொழும்பு கூட்டுறவு அச்சகத்தாருக்கும் **கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் என்றும் மறவா நன்றி உரித்தாகுக!**

வணக்கம்

**க. பாலசுப்பிரமணியம்,**
கௌரவ பொது நிர்வாகச் செயலாளர்,
கொழும்பு கொம்பனித்தெரு,
சைவ முன்னேற்றச் சங்கம்.


சங்கப்பணிமனை,
131, கியூ வீதி,
கொழும்பு-2.
1-2-69.

EV-LYN RUTNAM INSTITUTE
REFERENCE
LIBRARY
J



INSTITUTE
REFERENCE
LIBRARY
EVELYN RUT

கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க, நால்வர் சமய பாடசாலை, மாணவ மன்றத்தாரால் கொண்டாடப்பட்ட கலைமகள் விழா நிகழ்ச்சியில், சங்கப் பொதுச்செயலாளர் சகிதம் ஶ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள்.



கோணேசர் ஆலய படிகளில் நீதியரசர் உடையில் முதல்வரையும், பாரியாரையும் ஆலயபரிபாலன சபைத் தலைவர் டாக்டர் சித்திரவேலு அவர்கள் வரவேற்கின்றார்.

PRINTED AT THE
COLOMBO CO-OPERATIVE PRINTERS' SOCIETY LTD.
72, KEW ROAD, COLOMBO 2.